Registered No. M. 2330

'SIDDHANTHAM
Vol. 25—No. 1

ACC.NO. 33773

சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 25 | நந்தன மார்கழி 1952 டிசம்பர் | இதழ்

உள்ளுறை

பத்திராசிரியர்: சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.
உதவிப் பத்திராசிரியர்: வித்வான் - வை. குஞ்சிதபாதம் பிள்ளை
சைவ சித்தாந்த மகா சமாஜம்
53, திருவள்ளுவர் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15

மதிப்புரைகள்

1. முருகவேள் பன்னிரு திருமுறை; பதிப்பு உரையாசிரியர் தணிகைமணி செங்கல்வாராயபிள்ளையவர்கள். வெளியிடுபவர் திருமதி மீனாட்சி கல்யாணசுந்தரம் அவர்கள். 23 வடக்கு கோயில் புரம், சென்னை-6. முதற்பகுதி விலை ரூ. 1-0-0. திருப்புகழ் பாசுரங்களுக்குத் தெளிவான உரை வகுக்கப்பட்டுள்ள அரிய நூல்.

2. இந்திய சரித்திரக் கதைகள்—முதல் புத்தகம்: ஆசிரியர் V. நடராஜன் அவர்கள். விலை அணு 8. கிடைக்குமிடம்: 'பொன்னகம்' 174, காந்திநகர், அடையாறு, சென்னை. நான்காம் வகுப்புக்கு ஏற்றது. 22 கதைகளைக் கொண்டது. அலெக்சாண்டர் முதல் கொண்டு நேரு வரைக்கும்கூறுவது. மாணவர்களுக்குப் பயன்படத் தக்கது.

3. தமிழ் கற்பிக்கும் முறை:—ஆசிரியர் V. நடராஜன் அவர்கள். பயிற்சிபெறும் ஆசிரியர்களுக்கு மிகவும் பயன்படும். இதன் ஆசிரியர், ஆசிரியர்களுக்கே ஆசிரியராயிருந்தபடியினல் மிகத் தெளிவான முறையில் அனுபவங்களை உதவியாகக் கொண்டு இந்நூலை எழுதியிருக்கின்றார். ஆசிரிய மாணவர்களுக்கு மிகவும் பயன்படும் நூல். ஆசிரியரிடம் கிடைக்கும்.

ஸ்ரீகாசியாத்திரை விளக்கம்:—இயற்றியவர் ஸ்ரீமௌன தேசிகாதீனம் ஸ்ரீமத் சபாபதி சுவாமியவர்கள். கிடைக்குமிடம்: குமரன் செந்தமிழ் நூற்பதிப்புக் கழகம், சிதம்பரம். மூன்றாம்பதிப்பு விலை ரூ. 1-0-0.

இந்நூல் வடநாட்டு யாத்திரைசெய்ய விரும்பும் யாத்திரீகளுக்கு மிகவும் பயன்தரும். சிறப்பாக்க் காசியாத்திரை செய்பவர்களுக்கு மிகவும் பயன்படும். சென்னையிலிருந்து புறப்பட்டால் எந்தெந்த புண்ணிய க்ஷேத்திரங்கள் வழியாகக் காசிக்குச் செல்ல முடியுமோ அவைகள் எல்லாவற்றிலும் மக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகளெல்லாம் எழுதப் பட்டுள்ளன. சிறப்பாக வசதி, பாஷை ஆலயம் முதலியவைகளைப்பற்றி எழுதப்பட்டுள்ளது. காசியிலிருந்து திரும்பி வரும்போது காணக்கூடிய இடங்களின் செய்திகளும் கூறப்பட்டுள்ளன. பின்சேர்க்கையாகக் கேதாரம், பத்திரி, கைலை இம்மூன்றும் கூறப்பட்டுள்ளன. நூல் சிறிய அளவில் யாத்திரீகளுக்குக் கைக்கு அடக்கமாக அச்சிடப்பட்டுள்ளது. யாவரும் பெற்றுக் கொள்ளுக.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்
திங்கள் தமிழ்த் தாள்

மலர் இருபத்தைந்து

1952

தாளாசிரியர் :

திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.

உதவித் தாளாசிரியர் :

வித்வான் - வை. குஞ்சிதபாதம் பிள்ளை

சைவ சித்தாந்த மகா சமாஜம்
53, திருவள்ளுவர் தெரு,
சைதாப்பேட்டை, சென்னை - 15

o

உள்ளுறை

பொருள்		பக்கம்

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை-14

Reg. M. 2330

உ

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு

மலர் 25 | நந்தன மார்கழி 1952 டிசம்பர் | இதழ் 12

நாட்டு ஒலி

வான் சிறப்பு: மக்கள் வாழ்க்கைக்கு இன்றி யமையாதனவாகக் கொள்ளப்படுபவை மூன்று. அவை உணவு, உடை, உறையுள் என்பன. இவற்றுள் உறையுள் என்பது மனிதன் இயற்கைப் பொருள்கொண்டு செய்த செயற்கைப் பொருள். உடை என்பதும் மற்றொரு சேர்க் கைப்பொருள்; அதற்கும் விளைவால் ஆகிய மூலப்பொருள் தேவை. உணவு என்பது விளைவால் கிடைத்த இயற்கைப் பொருள். ஆகவே இம்மூன்றுக்கும் விளைவு அடிப்படை யாக நிற்கின்றது. விளைவிற்கு வானம், அல்லது மழை இன்றியமையாதது: வானம் பொய்க்கின் விளைவு இல்லை. பிறகு உணவும் கிடையாது. இதனைக் கண்டே வான் சிறப்பைக் கூற வந்த வள்ளுவனார்,

> "விண்ணினின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
> துண்ணின் றுடற்றும் பசி"

என்றும்,

> "விசும்பின் துளிவீழி னல்லான்மற் றாங்கே
> பசும்புல் தலைகாண் பரிது"

என்றும் கூறினார். ஆகவே உலக வாழ்க்கைக்கு இன்றி யமையாததாக வான் நிற்கின்றது. அவ்வானம் ஒழுங்காகப்

பெய்தாலன்றி உலகில் ஒழுக்கம் குன்றிவிடும். மற்ற அறச் செயல்களும் நடைபெறா. இதனைக் கண்ட வள்ளுவனார்,

"நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு"

என்று வற்புறுத்திக் கூறியிருக்கின்றார். எல்லாப் பொருள் களிலும் வானம் மிகச் சிறந்ததென்று காட்டுவதற்காக அதன் சிறப்பை கடவுள் வாழ்த்துக்கு அடுத்தபடியில் வள்ளுவனார் குறித்துள்ளார். இதனால் வானம் கடவுளின் அருளால் நமக்குக் கிடைக்கிறது என்று தொனிக்கிறதல்லவா ? இனி ஏனைப் பெரும்புலவர்களும் இதே கருத்தையே கொண்டிருப்பதை அறியலாம். மங்கல வாழ்த்துப் பாடலில் இளங்கோவடிகள் வானவர்களாகிய திங்களையும், ஞாயிற்றையும் முதற்கண் போற்றிவிட்டு, அடுத்தபடியாக மாமழையைப் போற்றுகின்றார்.

"மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்
நாமநீர் வேலி யுலகிற்கு அவன் அளிபோல்
மேல்நின்று தான்சுரத்த லான்."

என்ற அடிகளாருடைய வாக்கின்படி மழை ஞாயிற்றினால் நமக்குக் கிடைக்கிறது என்பது தெளிவு. மேலும் அம் மழையின் சிறப்பை அப்பெரும் புலவர் முதலிலேயே எடுத்தாண்டிருக்கின்றார் அல்லவா ? ஆகவே மழை மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருளாகும். அதனை மக்களின் பொருட்டு இறைவன் அவ்வப் பருவங்களில் தோற்றுவிக்கின்றான். மக்களும் அப்பருவ மழைகளால் கிடைக்கக்கூடிய பயன்களைத் துய்க்கின்றார்கள்.

மழை பருவங்களில் ஒழுங்காகப் பெய்தால் பயன் களும் ஒழுங்காகக் கிடைக்கும். அவ்வாறு பெய்யத் தவறினால் பயன்கள் கெட்டுப்போய் வறுமை ஏற்படும். மழை ஒழுங்காகப் பெய்வதற்கு மக்களுடைய நல்லொழுக்கமே காரணமென்று மக்கள் கருதுகிறார்கள். எல்லா மக்களும், ஒழுங்கு தவறினாலும், ஒருவன் ஒழுங்காக இருப்பின் அவனுக்காகப் பெய்யும் மழை மற்ற எல்லாருக்குமாக பயன் படும் என்று கருதுவதுண்டு. ஔவையார் வாக்கில்,

—" தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை "

என்பது இருக்கக் காண்கிறேமல்லவா? இதை வைத்துக் கொண்டு நமது மக்கள் பெரும்பான்மையோர், ஒழுக்கம் கெட்டு இருப்பினும், ஒருவன் நல்லவனுய் இருந்தாலே போதும்; மழைதவருமல் மெய்யும் என்று கூறுவதை நாம் கேட்கிறேம். எப்போதாவது ஓர் ஆண்டில் பருவ மழை தவறிவிட்டால் நமது வட்டத்தில் ஒருவருங் கூட நல்லவர் இல்லையோ என்று கேட்கத் தலைப்படுகின்றனர். இந்தக் கேள்வி விந்தையாக இருக்கிறதல்லவா?

சென்ற ஆண்டு முதற்கொண்டு இந்த ஆண்டு முழுமையுமே நமது தென்னட்டிலே மழை சரியாகப் பெய்யவில்லை. ஆறுகளில் நீர் குறைந்துபோய் கால்வாய்களிலும் குளங்களிலும், நீர் இல்லாமற் போக நன்செய் சாகுபடி கெட்டு வருகின்றது. புன்செய் முழுவதும் கெட்டுவிட்டது. குளம், குட்டைகளில் நீர் இல்லாமற்போகக் கிணறுகளிலும் நீர் வற்றிவிட்டது. ஆதலால் நிலங்களுக்கு மட்டுமன்றிக் குடிப்பதற்கும் குடிநீர் இல்லாமற் போய்விட்டது. எங்கு பார்த்தாலும் கிணறுகள் தோண்டப்பட்டு அடிவெட்டு போடப்பட்டு, பணம் விரையமாகிறதே ஒழிய நீர்மட்டம் கீழ்நோக்கிக் கொண்டே போகிறது. கால்நடைகளும் இரையும், நீரும் இல்லாமற்போய் வாடி வதங்குகின்றன. பயிர் பச்சையில்லாமற் போக உழவன் உணவுக்காகக் கால் நடைகளைப் பாதி விலைக்கும் விற்கத் தொடங்குகிறுன். இந்த நிலை பஞ்சத்தின் அறிகுறியல்லவா?

மக்கள் எப்பொழுது மழைபெய்யப் போகிறதென்று பேசிக்கொண்டே யிருக்கிறுர்கள். அலுவலாளர்களும் அமைச்சர்களும் இதே பேச்சுப் பேசுகிறுர்கள். உழவர்கள் தலையில் தாங்க முடியாத வரிப்பளுவை ஏற்றிக்கொண்டே யிருக்க மற்றெரு புறத்தில் மழை இல்லையே யென்று பரிதாபம் காட்டுகிறுர்கள். இதைப் பார்த்தால் துடை

யைக் கிள்ளி தொட்டிலை ஆட்டினாற் போலிருக்கிறது. மக்களில் அறிஞர்களில் சிலர் மழைபெய்விப்பதற்கு விஞ்ஞான முறையைப் பயன்படுத்தக் கூடாதா என்கின்றனர். மேல் நாடுகளில் அந்தச் சோதனைப் பரீக்ஷை செய்தவர்கள் அவ்வாறு கொண்டுவரப்பட்ட மழையினால் கண்ட பலனைக் காட்டிலும் பன்மடங்கு அதிகப் பணம் அதைக் கொண்டு வருவதற்கு விரையமாகிறதாம்; ஆகவே இது சிக்கன முறை ஆகாது; அது நமது நாட்டுக்குச் சிறிதும் ஒவ்வாது என்று சொல்லி வாளா யிருக்கின்றனர்.

நம்நாட்டு வழக்கப்படி, எப்போது துர்ப்பாக்கியம் வருகின்றதோ அப்போதெல்லாம் சோதிடம் பார்ப்பது இயல்பல்லவா? அதை யொட்டி மக்கள் அடிக்கடி சோதிடம் பார்க்கத் தொடங்குகிறார்கள். சோதிட அறிஞர்களும் தங்கள் நூல்களைப்புரட்டித் தங்கள் கணிதக் கணக்குகளை வெளியிடுகிறார்கள். சில நாள்களாக தினசரிகளும் வாராந்திரங்களும் இந்தச் செய்தியையே நிரப்பிக் கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டில் சனிக்கிரகம் கன்னி இராசியிலிருந்து துலாம் இராசிக்குச் செல்லுகிறதாம். அதற்குச் சனிப் பெயர்த்தி என்று பெயர். அதை முன்னிட்டுத் திருநள்ளாறிலும், திருவிழா நடைபெறப் போகின்றது; சனிப் பெயர்த்தி வந்ததும் நல்ல மழை வரப்போகின்றது என்று கணக்காயர்கள் எழுதிவருகின்றார்கள். வந்தால் நல்லது தான். ஆனால், அதே கணக்காயர்களில் என்றைக்கு சனிப் பெயர்த்தி வரப்போகிறது? என்ற கருத்து வேற்றுமை ஏற்பட்டிருக்கின்றது. சிலர் நவம்பர் 24 என்றும், சிலர் 26 என்றும் கூறுகின்றனர். சைவப் பஞ்சாங்கத்திலோ டிசம்பர், 30 என்று போட்டிருக்கின்றது. கணக்குச் சரியாக இருந்தால் இத்தனை வேற்றுமைகள் எவ்வாறு ஏற்படும்?

இது நிற்க, சமய நம்பிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் சில பெரியார்கள் தவத்தினாலும் வழிபாட்டினாலும், மழையை கொண்டுவரக் கூடும் என்று கூறி வேள்விகளையும், அர்ச்சனைகளையும் செய்து வருகிறார்கள். இலட்சார்ச்சனை செய்வது வழக்கமாயிருக்கிறது. கோவில்களில் நந்தி பீடத்தில்

குளிர் நீர் நிரப்புவது முதலிய சடங்குகளைச் செய்கிறார்கள். சில இடங்களில் அரவான் கதையாகிய கூத்தாண்டையை நடத்துகிறார்கள். பல இடங்களில் இராமாயண பாரத சொற்பொழிவுகளை நிகழ்த்துகிறார்கள். இவையெல்லாம் செய்தும் ஏன் மழைவரவில்லையோ?

அண்மையிலே விஞ்ஞான ஆராய்ச்சியிலே பல பயங்கர மான சோதனைகள்செய்துவருவதில் அணுகுண்டு சோதனை, ஜலவாயு குண்டு சோதனை முதலியவைகள் நடந்து வரு கின்றன. இந்தக் குண்டு வெடிகளால் அளக்கமுடியாத சூடு ஏற்பட்டு, தீவுகள் முழுமையாகக் கடலில் மூழ்கினவாம். இவ்விதச் சோதனைகளில் நிலத்தின் அமைதி வாயுமண்டலத் தின் அமைதி இவைகள் கெட்டுவிடுகின்றன. இந்தப் பெருங்கேடுகளால் மேக மண்டலங்கள் செயல் அற்று போய்விடக் கூடும். இதனாலே பருவக்காலங்களில் பெய்து வந்த மழை பிசகிவிடும். அதனால்தான் நமது நாட்டிலும் மழைபொய்த்துவிட்டது என்று மக்கள் பேசிக்கொள்ளு கிறார்கள். இது சரியா என்று ஒரு சிறிது கவனிப்போம்.

தென்னாட்டில் பருவமழை பிசகிற்றே ஒழிய வட நாட்டில் அது பிசகவில்லை. சில இடங்களில் அதிகமழை பெய்து ஊர்கள் பாழடைந்திருக்கின்றன. மேலும் ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களில் மழைதவறினதாகச் செய்தியில்லை. மற்றொரு இயற்கைச் செய்தியை எடுத் துரைப்போம். மழையானது பூமண்டலத்தின் எல்லைக் குள் உட்பட்டதே ஒழிய அதற்கு வெளியில், அதன் வியா பகம் இல்லை. பூமண்டலமென்பது ஐந்து பூதங்களால் ஆகியது. அவற்றுள் நீர், நிலம், காற்று இவைகளுக்குள் மழை கட்டுப்பட்டுள்ளது. மற்றொரு பூதமாகிய நெருப் பின் ஆற்றல் மழையைப் பெய்யும்படி செய்கின்றது. நெருப் பின் ஆற்றலாகிய வெப்பம் மட்டும் பூமண்டலத்திற்கு வெளியே உள்ள சூரியனிடத்திலிருந்து வருகின்றது. அவ் வாறு வரும் வெப்பம் நீர்நிலத்திலிருக்கிற தண்ணீரை ஆவியாகச் செய்து வாயுமண்டலத்தில் நிறுத்துகிறது. அங்கே குளிர்காற்றினால் அவ்வாவி நீராகமாறி மழையாகப்

பெய்கிறது. இந்த மழை பூமண்டலத்திலிருக்கிற நீரினுல் மட்டும் உண்டாகிறது. சூரியனிடத்திலிருந்து வரும் வெப்பம் ஒரே தன்மையானது. ஆகவே ஆண்டுக்கு ஒரு முறை பெய்யும் மழை ஒரே அளவு கொண்டதாகும். பருவ மழை மாறினுல் பெய்யும் இடத்தைப் பொருத்ததே தவிற மொத்த மழை ஒன்றே என்று அறியவேண்டும். ஆகவே குண்டுப் பரிசோதனைகளால் மழைபோயிற்று என்று கூறுவது சரியல்ல.

இனி, இந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் பருவ மழைதவறியதா? அல்லது முன்னுளிலும் இவ்வாறு மழை தவறியது உண்டா? என்று சிறிது ஆராய்வோம். மழை தவறினுல் விளைவு பாழாகும். வற்கடம் அல்லது பஞ்சம் ஏற்படும். இவ்விதப் பஞ்சங்கள் நமது நாட்டில் எக்காலத்திலும் ஏற்பட்டிருக்கின்றன. இதிகாச புராணங்களில் இச் செய்தியைக் காண்கின்றேம். வடநாட்டில் ஒரு பகுதியில் 12 ஆண்டுகள் மழையின்றிப் பஞ்சம் ஏற்பட கலைக்கோட்டு முனியைத் தந்திரம் செய்து கொண்டு வந்ததால் மழை பெய்ததாக இதிகாசங்கள் கூறுகின்றன. சந்திரகுப்தன் நாளில் அதாவது 22 நூற்றுண்டுகளின் முன் வடநாட்டில் பெரும்பஞ்சம் தோன்ற அங்கிருந்த சமண முனிவர்களை பத்திரவாகு என்ற சமண சமயாசிரியன் தென்னுட்டிற்குக் கூட்டி வந்ததாக இந்திய வரலாறு கூறுகின்றது. தென்னுட்டிலும் முகமதியர்கள் ஆட்சியில் பல தடவைகளில் மழையின்மையால் பஞ்சங்கள் தோன்றிக் கணக்கற்ற மக்கள் அழிந்திருக்கின்றனர். ஆங்கிலர் நம் நாட்டிற்கு வந்த பின்னர், முறையாக ஏற்பட்ட வறட்சிகளையும் பஞ்சங்களையும் குறித்திருக்கின்றனர்.

ஆங்கிலர்கள் எழுதிவைத்திருக்கும் குறிப்புக்களைப் பார்த்தால் 12 ஆண்டுகளுக் கொருமுறை மழையின்மை ஏற்படுவது இயல்பு என அறியலாம். அக்காலங்களில் விளைவுக்குறைவும், நோய் மிகுதியும், மக்கள், கால்நடை இவைகளின் சாவுகளும் காரணகாரியமாக ஏற்படும். இதற்கு ஒன்றிரண்டு எடுத்துக் காட்டுகளைக் கூறுவோம்.

கொங்கு நாட்டில் சேலத்தின் வரலாற்றைப் பற்றி எழுதின ஆங்கில ஆசிரியர் அவ்வட்டத்தில் 10, 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பஞ்சங்கள் ஏற்பட்டு வந்திருக்கின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார். அப்பேர்ப்பட்ட பஞ்சகாலங்கள் 1833, 1845, 1857, 1866, 1877, 1878, 1891, 1892. இந்த ஆண்டுகளில் கொடிய பஞ்சங்கள் ஏற்பட்டனவாம். 1866-ல் மழைபெய்யாமற்போக தொத்து நோய்கள் ஏற்பட்டு மக்களோடு கால்நடைகளும் இறந்தனவாம். ஏழைகள் புளியங்கொட்டை பலவித வேர்கள் கற்றாழைப் பழங்கள் முதலியவைகளைச் சாப்பிட்டார்களாம். மக்களுக்கு அரசாங்கத்தாரால் கஞ்சித் தொட்டிகள் ஏற்படுத்தப்பட்டன. ஒன்றரை லட்சம் கால்நடைகள் இறந்தன. அதனைவிட 1877 - 78ல் நிகழ்ந்த பஞ்சம் மிகவும் கொடியது ஈசுவர வருஷத்துப் பஞ்சம் என்பது ஒருபழமொழியே ஆகிவிட்டது. இரண்டாண்டுகளிலும் பருவ மழையானது தவறிவிட்டபடியால்தான் தானியம்கிடையாமற் போய் விலை உயர்ந்துவிட்டது. ஏழைமக்களுக்கு அருந்த நீரும், குடிக்கக் கூழும் இல்லாமல் போய்விட்டது. 137,000 மக்கள் இறந்து விட்டார்கள். 3 லட்சம் பேர்களுக்கு கஞ்சி வார்க்கப்பட்டது. தொத்துவியாதிகளுக்கோ அளவில்லை. ஒரு கிராமத்தில் 24 பிணங்கள் ஒரே சமத்தில் சுடப்பட்டன என்றால் அந்தக் காலக்கொடுமையைப்பற்றி கூறவும் வேண்டுமா? நாட்டில் கொலையும், குற்றங்களும் பல மடங்கு அதிகமாயின. அப்படிப்பட்ட பஞ்சம் அதுவரை வந்ததில்லை என்பர். 1891—92 ஆண்டுகளில் ஏற்பட்ட பஞ்சம் அவ்வளவு சேடு விளைவிக்கவில்லை. சில தாலூகாக்களில் மட்டும் கஞ்சித் தொட்டிகள் வைக்கப்பட்டனவாம். இவ்வாறு ஏற்பட்ட பஞ்சங்களுக்குக் காரணம் மழையின்மையே ஆகும்.

இனி கொங்கு நாட்டில், கோவை வட்டத்திலும் இவ்விதமாகவே மழையின்மையும் பஞ்சமும் முறையாக ஏற்பட்டிருக்கின்றன. அந்தச் செய்திகள் கோவை வட்டத்து வரலாற்று ஆசிரியர் குறித்திருக்கின்றார். 1866 முதல், இருபது ஆண்டுகள் வரை ஆண்டு ஒன்றுக்குச் சராசரி

25 அங்குலம் மழைபெய்ததாம். ஆனல், 1868ல் 19½அங்குலமும், 1876ல் 17½ அங்குலமும், 1881ல், 19 அங்குலமும் மட்டும் பெய்ததாம். இந்தக் கணக்கிலிருந்து குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு ஒருமுறை மழை குறைந்துபோகின்றதென்று அறிகிறேம். மேலும் அதே நூலில் 1800 முதல் கொண்டு, 1880 வரை 80 ஆண்டுகளின் மழை, விளைவு, இவைகளைப் பற்றிய குறிப்புக்கள் எழுதப்பட்டுள்ளன. அவைகளில் மழை தவறின ஆண்டுகள் 1802, 1812, 1823, 1827, 1830, முதல் 1833 வரை, 1845, 1857, 1861, 1876, 1877 முதலியன. இந்த கணக்குப்புள்ளிகளை ஆராயும் பட்சத்தில் சில ஆண்டுகளுக் கொருமுறை மழையின்மையால் வறட்சி ஏற்பட்டிருக்கிறதென்று அறிகின்றேம். இவ்விதமாக குறித்த கெடுவுகளுக்கு ஒருமுறை மழையின்மையால் வறட்சி ஏற்படுவது இயல்பாக இருப்பதல்லவா? அப்படியாயின் மக்களுடைய தீச்செயல்களினுலும் குணக்குறைவினுலும் மழையின்மை ஏற்படுகிறதென்பது பொருந்துமா எனக் கேட்கலாம்.

நாளது ஆண்டில் வடநாட்டில் மழைக் குறைவு இல்லாமற்போன போதிலும், தென்னுட்டில் அது ஏற்பட்டுப் பஞ்சம் விளைந்து வருவதை அறிகிறேம். இராயலு சிமையிலும், கொங்கு நாட்டின் பெரும்பகுதியிலும் மழையின்மையோடு வறட்சியும் உணவுப்பொருள் குறைவும் ஏற்பட்டிருக்கின்றன. அரசியல் காட்டும் முயற்சிகளால் மிகுந்த பயனும் நாம் பெறவில்லை. ஆகவே இந்த நாட்டு நிலைமைக்கு யாது காரணமென்று உரைக்க முடியுமா?

இவ்வாறு இயற்கை அமைப்பு இருக்க,

"அமுதூறு மாமழை நீரத னாலே
அமுதூறும் பன்மரம் பார்மிசை தோற்றுங்
கமுகூறு தெங்கு கரும்பொடு வாழை
அமுதூறுங் காஞ்சிரை ஆங்கது வாமே"

என்று வான்சிறப்பைப் பற்றிக் கூறின திருமூலர் வானம் பொய்த்தலுக்கு அடியிற் கண்ட செய்யுள்களால் பலன் கூறுகின்றார்.

"ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில்க ளெல்லாஞ்
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே."

"முன்னவ னார்கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்."

"பேர்கொண்ட பார்ப்பான் பிரான்தன்னை அர்ச்சித்தாற்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமு மாம்."

இந்தப் பாடல்களில் காணும் கருத்துக்களை ஆராயுங்கள். திருக்கோயில் பூஜை முட்டுப்பட்டால் பஞ்சமும் வறட்சியும் ஏற்படுமென்று நாயனர் கூறுகின்றாரல்லவா? இக்கருத்துக்களைத் தற்காலத்து மக்கள் ஏற்றுக் கொள்ளுவார்கள் என்றால் அவர்கள் ஆலயத்து ஒழுங்குகளைச் செம்மைப் படுத்த வேண்டியது அவசியமல்லவா?

நிலப்பகுதி

காஞ்சீபுரம்

1. இடம் :—இது தொண்டை நாட்டின் முதல் திருப்பதி பல்லவர் காலத்தில் இராஜதானியாக இருந்தது. அந்தக் காலத்தில் பாத கண்டத்தில் ஏழு சிறந்த நகர்களில் ஒன்றாயிருந்தது. இப்பொழுதும் ஊரின் அமைப்பு, தெருக்களின் பெருமை, ஆலயங்களின் எண்ணிக்கை முதலியவைகளை ஆராய்ந்தால் இந்நகரம் முதல் தரத்தில் வைக்கப்பட வேண்டி வரும். இது சென்னைக்கு மேற்கே, 40 கல்லில் உள்ளது. பாலாற்றின் அருகே வேகவதியின் கரையில் அமர்ந்துள்ளது. அறக்கோணத்திற்கும், செங்கல்பட்டுக்குமிடையே இருப்புப்பாதை நிலையமாக இருக்கின்றது. ஊர் மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சிவகாஞ்சி என்ற பெரிய காஞ்சியும், விஷ்ணுகாஞ்சி என்ற சின்னகாஞ்சியும், ஜினகாஞ்சி என்ற திருப்பருத்திக்குன்றமும் இவ்வூரில் அடங்கியிருக்கின்றன. பெரியகாஞ்சியில், ஏகம்ப

நாதர் கோவிலும், சின்னகாஞ்சியில், வரதராசப்பெருமாள் கோவிலும், ஜினகாஞ்சியில், அருகக்கடவுள் ஆலயமும், சிறப்பாக அமைந்திருக்கின்றன. நகரம் பெரியது. பல பகுதிகளைக் கொண்டது. பண்டைய சின்னங்கள் கணக்கின்றி இருக்கின்றன.

2. ஆலயங்கள்: இவ்வூரில் 360 ஆலயங்கள் இருக்கின்றன. சைவ, வைஷ்ணவ, தேவி, கணபதி, ஸ்கந்தர், ஜினர், பௌத்தர் முதலிய ஆலயங்களும் சமயச் சின்னங்களும் கணக்கில்லை. விவரங்களைக் காஞ்சிப் புராணத்தில் கண்டுகொள்க. இவை எல்லாவற்றிலும் பெரியது ஏகம்பநாதர் கோவில். பஞ்சபூதத்தலங்களில் இது பிருதிவித்தலம். கோவிலுக்குள் ஒற்றை மாமரம் சிறந்தது. ஆலயத்துள் கச்சிமயானம் என்ற வைப்புத்தலம் ஒன்று உண்டு. கோவிலின் கோபுரம் மிகப்பெரியது. ஆயிரக்கால் மண்டபம் நூற்றுக்கால் மண்டபம் முதலியவைகள் உண்டு. அவைகளில் மிக அருமையான சித்திர வேலைப்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன.

3. பாடல் பெற்ற தலங்கள்: கச்சிநகரத்தில் 5 பாடல்பெற்ற தலங்கள் உண்டு. (1) கச்சி ஏகாம்பரநாதர், (2) கச்சிமேற்றளி, (3) ஓணகாந்தன்தளி, (4) அநேகதங்காவதம், (5) கச்சிநெறி காரைக்காடு. இவைகளில் கச்சி ஏகம்பத்திற்கு 12 பதிகங்களும், மேற்றளிக்கு, 2ம், மற்றவைகளுக்கு ஒவ்வொரு பதிகமும் உண்டு.

4. மற்ற சிவத்தலங்கள்: நகரத்திற்கு வெளியே பல்லவர்களால் கட்டப்பட்ட இராஜசிம்மேசுவர மென்ற கைலாசநாதர் கோவில் மிகப்பழமையானதும், சிற்பச் சிறப்புக்களைக் கொண்டதுமாக இருக்கின்றது. மற்ற ஆலயங்கள் கச்சபேசுரம், ஐராவதேசுவரம் முதலிய பல இருக்கின்றன. இந்தத் தலங்கள் எல்லாவற்றிற்கும் ஆக ஒரே அம்மன் கோயில் உண்டு. அது காமகோட்டம் என்னும் காமாட்சி அம்மன் கோயில். ஏனைய தலங்களைப்போல இவ்வூரில் ஒவ்வொரு கோவிலிலும் அம்மன் கிடையாது. முருகன் ஆலயம் தனியாக உண்டு. அது குமரகோட்டம்

என்று சொல்லப்படும். இங்கேதான் தமிழ்க் கந்தபுராணம் பாடப்பட்டது.

5. அடியார்கள் : மூவர்களே அன்றி, பட்டினத்தார் போன்ற மற்ற திருமுறை ஆசிரியர்களும் காஞ்சிபுரத்தை வழிபட்டுப் பாடியிருக்கிறார்கள். சுந்தரமூர்த்திகள் இங்கே இடக்கண் அருளப் பெற்றார். ஏகாலியர் குலத்துத் திருக்குறிப்புத்தொண்ட நாயனார் இங்கே அருள் பெற்றார். புத்த சமயம் புகுந்திருந்த சாக்கிய நாயனார் அருள்பெற்றார். பல்லவர் குலத்து ஐயடிகள் காடவர்கோன் வெண்பாக்கள் பாடி அருள்பெற்றார். இவைகளே அன்றிக் கணக்கற்ற ஐதீகங்களும் இங்கே நடைபெற்றிருக்கின்றன. இவைகள் நடந்த ஆலயங்களும் தனித்தனியே இருக்கின்றன.

6. தீர்த்தங்கள் : வேகவதி, கம்பைநதி, சர்வதீர்த்தம், சிவகங்கைமுதலியகணக்கற்ற தீர்த்தங்களிருக்கின்றன. கச்சிமேற்றளியிலும், சர்வதீர்த்தக் கரையிலும் மாமுகடியின் (ஜேஷ்டா தேவி) திருவுருவங்கள் இருக்கின்றன.

7. ஐதீகங்கள் : தேவியார், கைலையிலிருந்து இங்கே எழுந்தருளி, 32 அறங்களையும் புரிந்து, அறம் வளர்த்த நாயகி என்ற பெயரோடு தவம் செய்கையில், மண்ணினால் இலிங்கம் செய்து வழிபட்டகாலத்தில் கம்பை நதிப் பெருக்கெடுத்து இலிங்கத்தை வெள்ளம் அடித்துக்கொண்டு போக இருக்கையில் தேவி இலிங்கத்தைத் தழுவிக்கொண்டு இருக்கையில் சுவாமி பிரத்தியட்சமாகி அருள் தந்தனர். மேலும் திருவேகம்பத்தில் அயன், மால், உருத்திரன் இம்மூவரும் பூசித்த சிவலிங்கங்கள் முறையே, வெள்ளைக்கம்பம், கள்ளக்கம்பம், நல்லக்கம்பம் எனப் பெயர்பெறும். தலவிநாயகர் பெயர் விகடசக்கரர். கந்தர் பெயர் மாவடிக்கந்தர். மரத்தின் பெயர் மாமரம்.

8. திருமால் ஆலயங்கள் : இத்தலத்தில் ஆழ்வார்களால் பாடப்பெற்ற தலங்கள் 18. இவைகளில் மிகப் பண்டையது வைகுண்டநாதர் கோவில். மற்றவைகள் உலகளந்த பெருமாள் முதலியன. இவைகள் எல்லாவற்றிற்கும்

ஆழ்வர்களால் பாடப்பெற்ற பாசுரங்கள் உண்டு. திருமால் ஆலயம் எல்லாவற்றிலும் மிகப்பெரியது. அத்திகிரி என்று சொல்லும் வரதராஜப் பெருமாள் கோவில். இக்கோவிலில் தான் உடையவர் என்ற இராமானுஜர் வழிபட்டது. இக் கோவிலும் மிகப்பெரியது. மாடக்கோவிலாகக் கட்டப் பட்டுள்ளது. விஜயநகர அரசர்களால் திருப்பணி செய்யப் பட்டது. இதிலும் மிகவும் சிறந்த வேலைப்பாடு கொண்ட நூற்றுக்கால் மண்டபம் முதலிய பல மண்டபங்களும், பெருங்கோபுரங்களுமுண்டு.

9. ஏனைய ஆலயங்கள்: பௌத்த சமண சின்னங்கள் கணக்கற்று இருக்கின்றன. பெரிய பௌத்த சிலைகள் சில இடங்களில் புதைந்து கிடக்கின்றன. மகா நிர்வாணம் போன்ற சிற்பங்களும், சில மதில்களில் கட்டப்பட்டிருக்கின்றன. திருப்பருத்திக்குன்றத்தில் உள்ள ஜைன ஆலயம் நன்றாக வைக்கப்பட்டிருக்கின்றது. அதிலுள்ள படிமைகள் அழகாக இருக்கின்றன. வெளிமண்டபத்தின் முகட்டில் சமண வரலாறு முழுவதும் அழகிய வர்ணங்களால் தீட்டப்பெற்று இருக்கின்றன. சமண நூல்களில் உள்ள சரித்திரம் முழுவதும் இங்கே ஓவியமாகக் காணலாம். இதனைப் படியெடுத்துச் சென்னைக் கண்காட்சிச் சங்கத்தார்கள் ஒரு நூலாக வெளியிட்டிருக்கின்றார்கள். இந்தத் தலத்தில்தான் மணிமேகலை, சமயவாதம் புரிந்ததாக அந்நூல் கூறுகிறது.

சிந்தையை யடக்கிக் காத்தல்

[தென்னாப்பிரிக்கா–டர்பன்–திரு. ச. மு. பிள்ளை அவர்கள்]

நமது உள்ளத்தினின்று இடையறாது எழாநிற்கும் எண்ணங்கள் வாழ்விற்கு இன்றியமையாதனவாம். ஏற்ற உணவு உண்பதால் உடல்நலனும் வலிவும் பெறுதல்போல, தகுந்த எண்ணங்களை எண்ணுதலால் சிந்தை சீர்பெறுகிறது. ஆதலாலே தகாத எண்ணங்களினின்று சிந்தையைக் காக்

கும் விரதத்தைக் கடைப்பிடித்தல் அவசியமாகின்றது. இதைச்செய்ய குறிப்பிட்ட காலங்களில் நமது தொழில்களை யும் அலுவல்களையும் நிறுத்திவைத்துவிட்டு நம்மை நாமே ஆராயவேண்டும். வேறு சில சமயங்களில் நாம் ஆற்றும் வினைகளினின்று அடியோடு விலகினவர்களாய், அவைகளுக் கும் நமக்கும் எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ளாதவர் களாய், நாம் அவைகள்மாட்டு வெறும் சாட்சி மாத்திரமாய் நிற்கப் பயிலவேண்டும்.

நாள்தோறும் குறைந்தது மும்முறை மனதை ஆராய்ந்தும், பிரார்த்தனை, தியானம், ஜபம் முதலியன புரிந்தும் வருவது நம் நாட்டுப் பழைய வழக்கம். காலை, உச்சிவேளை, மாலை ஆகிய இம்மூன்று நேரங்களும் வந்தனை வழிபாட்டிற்கு மிக வசதியான காலங்களாம். இயற்கை யாகவே அமைதி பொருந்திய இந்த மூன்று வேளைகளில் செய்யப்படும் மனோ நிக்ரகம் ஆராதனை இவைகட்கு சந்தியா வந்தனம் என்றும், திரிகால பூஜையென்றும் பெயர். வெளி யுலகிலே உண்டாகின்ற அமைதிக்கிணங்க நமது உள்ளுல காகிய சித்தத்திலும் இத்தருணங்களில் ஒருவிதமான சாந் தம் ஏற்படுகிறது. வாழ்நாளை நாம் எவ்வாறு கழித்து வருகிறோம் என்று ஆராய்தற்கு இவை ஏற்ற தருணங்களா கின்றன. தன்னைத்தானே பரிசோதிப்பதால் உண்டாகும் பலன் யாது என்பது சொல்லாமலே விளங்கும். நமக்கு அன்னியமாயிருந்து நம்மைத் துன்புறுத்துபவைகள் இன் னின்ன வென்பதை நாம் விரைவில் தெரிந்துகொள்கிறோம். ஆனால் நமக்கு உண்டாகும் அல்லல்களில் பெரும்பான்மைக் குக் காரணம் நாமே. சாதாரணமாய் இதை நாம் அறிந்து கொள்வதில்லை. அறிஞன், அறிவிலி இவ்விருவர்கட்கு மிடையே உள்ள வேற்றுமையும் இதுதான். தன்னை வந்து தாக்குகின்ற துயரங்களுக்கெல்லாம் காரணம் வெளியுல கென்று எண்ணிச் சிற்றறிவுடையவொருவன் அதன்மீது குறை கூறுகிறான். ஆனால் பேரறிஞனோவெனின், "நான் நடுநிலை பிறழாத மனோவுறுதியுடன் இருப்பேனாகில், எனது சாந்தி யைக் குலைக்கவல்லவர் யாரும் எவ்வுலகிலும் இல்லை" என்று

பகர்கின்றான். அதற்கிணங்க அவனது சிந்தை புறவுலகால் கெடாதவண்ணம் அவன் அதைச் சதா காத்துவருகிறான்.

யாண்டும் சலித்துக்கொண்டிருப்பது சிந்தையின் போக்கு. அது கட்டுக்கு அடங்காதது. பேய்போலவும், வெறிபிடித்த குரங்குபோலவும் அது இடையறாது விஷயாதிகளில் தாவிக்கொண்டேயிருக்கிறது. இச்சிந்தையை யடக்கிச் சும்மாயிருப்பது முனிபுங்கவர்களுக்கும் சுலபமாய்க் கைகூடுவதன்று. ஆதலால் அதை அடக்கப் புகுமுன் அது பதைபதைப்பதற்கும், கூத்தாடுதற்கும் காரணம் யாதென்பதை நன்கு ஆராய்தல் வேண்டும். காற்றடிக்கும் போதெல்லாம் மரத்தின் இலைகள் ஆடுகின்றன. அதுபோலவே, வெகுளி, பொறாமை பொய்ப்பொருளில் வாஞ்சை, இத்தகைய காற்று அடிக்கும்போது மனம் சலங்குகிறது. சிற்றின்பம் விளைவிக்கிற பொருள் ஒன்றின்மீது மனம் அதிசுலபமாகப் பாய்கிறது. அப்பொருளில் தனக்குற்ற சுகம் ஏதோ இருப்பதாக எண்ணுதலே அதற்குக் காரணம். திரும்பத் திரும்ப அவ்விஷயத்தையே நினைப்பதால் அதன் மீது பற்றுண்டாகிறது. தொடர்ந்தே அதை அனுபவிக்க வேண்டுமென்ற ஆசையும் வந்துவிடுகிறது. அந்த ஆசைக்கு இடைஞ்சல் வரும்போது கோபம் உண்டாகிறது. கோபமோ மனிதனைப் பைத்தியக்காரனாக்கிவிடுகிறது. புயல்காற்று அடிக்கும்போது அடவியிலுள்ள மரம், செடி, கொடிகளுள் வித்தியாசம் தெரியாதுபோய்விடுவதுபோல, கோபத்தால் வரும் குழப்பத்தால் மனிதனுக்கு நல்லது கெட்டது இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் தெரியாது போய்விடுகிறது. இவ்வாறு அறிவை இழந்தவன் மதிகெட்டவனாகிறான். புத்தியைப் பறிகொடுத்தவன் நாசமடைகிறான் என்பது மேலோர்களது துணிபு. நாம் அனுபவத்தில் காண்பதுவும் அதுவே. சிற்றின்பம் சுகம்போலத் தோன்றித் துக்கமாக முடிகிறது. அதில் இன்பம் கடுகளவு என்றால், துன்பம் மலையளவு உளது. எனினும் அதில் மெய்யான இன்பம் இருக்கிறதென்று எண்ணுதலாலேதான் அறியாமல் அது மாந்தர்களைப் பலவந்தமாக விஷயங்களில் இழுத்துச்

சென்று அவர்களைப் பாழ்ப்படுத்துகிறது. மனம்போன போக்கிலே போவதால் வரும் தீங்கு இன்னதென்று இடையறு விசாரணை செய்தலே, அதன்வேகத்தை அடக்க உற்ற உபாயமாம்.

மனோ நிக்கிரகம் செய்வதற்கும் ஆத்மசாதனம் பயிலுவதற்கும் ஏற்ற அநுஷ்டானமுறை போதியளவு நமக்கு வழங்கப்படவில்லை யென்று பலர் கருதுகின்றனர். சாதனம் என்பது பாக்கியசாலிகளான ஏதோ சில பெரியார்கள் கைவசமிருக்கும் இரகசியங்கள் என்பது இவர்களது கொள்கை. அந்த மர்மத்தை ஏதோ ஒருவிதத்தில் எப்போதாவது தெரிந்துகொண்ட மாத்திரத்தில் சிந்தையை அடக்கிச் சித்திபெறுதல், சுவாநுபூதி யடைதல் இவை போன்ற மேன்மைகளை யெல்லாம் வெகு சுலபமாகப் பெற்றுவிடலாமென்று இவர்கள் மனப்பூர்வமாக நினைந்து வருகிறார்கள். பிள்ளைகளுக்குப் பாலூட்டுவதுபோல, இவர்கள் விரும்புவதை யாரோ பெரியார்கள் இரகசியமாக வந்து இவர்களுக்கு வழங்கிவிடுவார்கள் போலும்! அறியாமையும், பலவீனமும், தன்னம்பிக்கை யின்மையுமே இத்தகைய புல்லிய கொள்கைக்குக் காரணம். தேகவலிமை பெற விருக்கிற ஒருவன் தேகப்பயிற்சியைப் பற்றிப் படித்தால் போதாது; புஜபாக்கிரமம் படைத்திருக்கும் ஒருவனைப் பார்த்தாலும் போதாது; அவன் சொல் கேட்டாலும் போதாது; தானும் அவ்வழியே நடக்கவேண்டும். தேகப் பயிற்சி செயவதை வாழ்வின் ஒரு முக்கிய அம்சமாக வைத்துக்கொள்ளவேண்டும். பாரமார்த்திக விஷயமும் இதுபோன்றதுதான். கேவலம் கேட்பதாலும் படிப்பதாலும் மட்டும் அது நமக்குப் பலிக்காது. பெரியாரைப் பின்பற்றி நாமும் மேலான வாழ்வு வாழவேண்டும். மனதைப் பண்படுத்தப் பல ஜன்மங்கள் எடுக்கவேண்டியதும் அவசியமாகலாம். வீண் ஆத்திரத்தால் ஒன்றும் சித்தியாது. குன்றா முயற்சியுடன் உள்ளத்தைத் தூயதாக்கி வரவேண்டும்.

வாழ்விலே சில சமயங்களில் நமக்கு இடைஞ்சல்கள் பல உண்டாகின்றன. அயலார் நம்மோடு ஒத்து வாழ்கிறார்க

ளில்லை; வெளி உலக அமைப்பு நமக்கு எவ்விதத்திலும் வசதிகாமாயில்லை; நம்மெதிரே தோன்றுகிற உயிர் வாழ்வன உயிரில்லாதன யாவும் நமக்கு இடுக்கண் விளைவிப்பன வாகவே தோன்றுகின்றன. முட்டுப்பாடாய்த் தோன்றும் இவை யாவையும் வெறுத்து இத்தகைய விபரீதமான ஊரிலே, அல்லது காட்டிலே நாம் வாழலாகாதென்று எண்ணி, வசதியான மற்றோர் இடத்துக்குப் போய்விடுகிறோம். அங்கு துவக்கத்தில் எல்லாம் நமக்கு இன்பகாமாகவே இருக்கின்றன. புதிய இடத்தில் நமக்கு ஒருவித மான சாந்தியும் உண்டாகிறது. ஆனால் நாளடைவில் அக்காட்சி சிறிது சிறிதாக மாறுகிறது. இங்கும் நண்பர்களைப் பற்றி நாம் முதலில் கொண்டிருந்த அபிப்பிராயத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக மாற்றுகிறோம். சொற்ப நாளில், அவர்கள்மாட்டு நாம் காணலுற்ற பெருமைகளெல்லாம் மறைந்து போகின்றன. சிறுமைகள் ஒன்றன்பின் ஒன்றாக அடிக்கடி நம் கண்ணெதிரே வந்து தோன்றுகின்றன. பழைய இன்னாத உலகம் இங்கு வந்துவிட்டது! ஆனால் ஆழ்ந்து ஆராயுமிடத்து உண்மை விளங்கும். உலகம் ஒரு போதும் இன்னாததல்ல. அது இன்ப மயமாகத்தானிருக்கிறது. நாமோ செல்லுமிடமெங்கும் நமது மனதையும் எடுத்துச் செல்கின்றோம். அது போகுமிடமெல்லாம் தன்மயமான உலகத்தை உண்டுபண்ணிக்கொள்ளுகிறது. சுத்த மனது சென்றவிடமெல்லாம் சொர்க்கம். நீச மனது நாடியவிடமெல்லாம் நாகம். உலகனைத்தும் மனம்போல மாங்கல்யமாயிருக்கிறது. ஆதலாலேதான் தீய சுபாவத்தில் வளராவண்ணம் சிந்தையைக் காப்பது அவசியமாகின்றது.

வண்டி ஓட்டுகிற ஒருவன் கடிவாளத்தை உறுதியாய்ப் பற்றிக் குதிரையை முற்றிலும் தன் கைவசத்தில் வைத்திருக்கவேண்டும். அப்படி யல்லாது அது செல்லுகிற வழி விட்டுவிடுவானாகில் பிரயாணத்தில் அபாயம் நேரிடலாம். மானிட வாழ்வு என்னும் பிரயாணமும் இதுபோன்றது. தேகம் என்னும் ரதத்தில் ஆத்மா ஊர்ந்திருக்கிறது. மனதென்னும் குதிரை ஒன்றை அதற்குப் பூட்டி, ஐம்புலன்

களைக் கடிவாளமாகக் கொண்டு, புத்திபெனும் சாரதி அதை ஓட்டுகிறது. சாரதி அறிவாளியாகவும் வல்லவனாகவும் இல்லாவிட்டால் மனக்குதிரை ரதமாகிய தேகத்தை எங்கு வேண்டுமானாலும் இழுத்துச் செல்லுகிறது. அதன் பலனாக எக்கணத்தில் என்ன நேரிடுமென்று யாராலும் நிர்ணயிக்க முடியாது. இது இப்படியிருக்க நாம் செய்கிற எல்லாக் காரியங்களிலும் நமக்குச் சுதந்தரம் வேண்டுமென்று நாம் வற்புறுத்துகிறோம். அயலார் நம் அலுவல்களில் அனாவசியமாகத் தலையிடுகிறார்கள் என்று மிக எளிதில் நாம் குறை கூறிவிடுகிறோம். அதை முன்னிட்டு நம்பால் எழும் பதை பதைப்பு, துர்நடத்தை, முன்கோபம், பொறாமை இவைகளுக்கு ஏற்க காரணம் பல எடுத்துக்காட்டி, கேட்போருக்குச் சமாதானம் ஊட்டி, நமது ஜடத்தை சரியானதென்று அதை ஆதரித்துக்கொள்கிறோம். ஆனால் உயர்வாழ்வுக்கு அடிப் படையாகவும் ஆதாரவாகவும் இருக்கும் ஒரு தத்துவம் ஈண்டுக் கருதற்பாலது. சிந்தையைக் காக்கின்ற பொறுப்பு மிக மேலானது. மனப்போன போக்கிலே போவது சுதந் தரமன்று; அதை முற்றிலும் கைவசப்படுத்தி யிருப்பது தான் சுதந்தரம். கைவசப்பட்டிருக்கும் உள்ளத்தை வெளி யுலகு எவ்வளவு ஊன்றித் தாக்கினபோதிலும் அதன் நடு நிலை குலையாது. இனியது இன்னாது எது நிகழினும் மனம் தடுமாறாது உறுதியாயிருக்க வேண்டும். வெற்றிகளுள் மனக்கோட்டையை வெல்லுதற்கு ஒப்பான வெற்றி வேறொன்றுமில்லை. மனதை வென்ற மனிதன் வெளி யுலகின்மீது குறைகூறுவதில்லை. பண்பட்ட வாழ்விற்கு அறிகுறியும் இதுவேயாம்.

நமக்கு உண்டாகும் பிணிகளில் பெரும்பான்மை மனோ சம்பந்தமானவை. எந்த மருந்தைக் கொண்டும் அவை களைப் போக்கவொண்ணாது. தேகத்திலுள்ள வியாதி என்றால் ரணவைத்தியன் ஒருவன் அதைப் போக்கிவிட லாம். ஆனால், மனதின்கண்ணேயுள்ள வியாதியைக் கிளறி வெளிப்படுத்தத் தானே முயன்றாலொழிய அதைப் போக்க வேறெவராலும் இயலாது. தம் உள்ளத்தினுள்ளேயுள்ள

வழுக்களை வெளிக்காட்ட இயையாதிருத்தல் மாந்தரது இயல்பு. நம் குறைபாடுகளைப் பிறர் தெரிந்துகொள்ளுவதை நாம் விரும்புகிறோமில்லை. நமது குறைபாடுகளை வெளியிடுவதால் நமக்கு ஏதோ சிறுமை வருவது போலத் தோன்றுகிறது. ஆனால், உண்மையில் அதில் சிறுமை யொன்றுமில்லை. நெஞ்சினில் உள்ள வஞ்சகத்தை ஒளியாது களைந்து கலைந்தலே சத்திய விரதம் பூண்டு ஒழுகுதற்கு உற்ற உபாயம். மன வலிமையும் மேன்மையும் படைத்தவர்கள்தான் தங்களது குற்றங்களைத் தாங்களே ஓர்ந்து அறியவோ, அல்லது எடுத்துக்காட்டினால் ஒத்துக்கொள்ளவோ வல்லவர்களாயிருக்கிறார்கள். குறைபாடுகள் உள்ளவாறு காணலுறும்போதே கண்டிக்கப்படுகின்றன; மனமும் அப்போது சாந்தி பெறுகிறது; நமது சுபாவம் அடியோடு மாறுகிறது. உண்மையையே சிந்தித்து, உண்மையையே பேசி, உண்மையின்படியே ஒழுக நாம் கற்றுக்கொள்வோமானால், அதன் பலனாக நாமடையும் வன்மையும் மேன்மையும் சொல்லுக்கடங்கா.

சிந்தையைக் காத்துப் பரமவனுபூதி வாய்க்கப்பெற்ற பெரியார்கள் புகட்டிய சன்மார்க்கத்தில் ஒரு தனிப் பெருமையுண்டு. வாக்குச் சாதுரியம் யாதொன்றும் அவர்கள்பால் கிடையாது. பெருங்கோயிலாகிய அவர்களது சொல்லும் எளியதாயிருக்கிறது. அன்னார் கண்டறிந்த உண்மையை, மலைவிளக்கு என இவ்வண்ணம் நமக்கு எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். "எங்கும் நிறைந்துள்ள கடவுள் நமது உள்ளத்துள் குடிகொண்டுள்ளான். மனதின் கண்ணேயுள்ள மாசைப் போக்கினால் மேகத்தினின்று விடுபட்ட சூரியன்போல அவன் நமக்குத் தெற்றென விளங்குவான்." "பரிசுத்தமடைந்த மனது பாலகனது மனம் போன்று கபடமற்றது. ஆசையெனும் காற்று அதனுள் அடிப்பதில்லை." "வேற்றுமையை வளர்ப்பது அஞ்ஞானம்; ஒற்றுமையை உண்டுபண்ணுவது ஞானம்." இதுபோன்ற தீஞ்சொற்களில் எத்தகைய மேலான தத்துவங்கள் புதைந்து கிடக்கின்றன! இவைகளில் ஏதேனும்

ஒன்றை நாம் குறிக்கோளாக வைத்துக்கொள்வோமானுல், அது நமது சிந்தையைக் காத்துச் சுத்தி பண்ணவும், சுத்தி யடைந்தபின் அதைத் துடைத்துப் பிறவிப் பெருங்கடலைத் தாண்டவும் போதுமானதாகும்.

சஞ்சலப்படுகிற மனது சாந்தமடையும்போதுதான் நமக்குப் பெருவாழ்வு வந்தெய்துகிறது. அப்போது ஒரு கணமேனும் நமது வாழ்வு வீணுப் போவதில்லை. குவிந்த மனது பண்படுகிறது; அமைதி பெறுகிறது; பலமுறு கிறது; மாண்பனைத்தும் ஒருங்கே வாய்க்கப் பெறுகிறது. எனவே, சிந்தையைக் காததுப் பண்படுத்த சதாகாலம் பயின்று வரவேண்டும். கொல்லன் இரும்பை உலையிலிட் டுக் காய்ச்சி உருட்டுவதுபோல, அறிஞன் ஒருவன் மன தைத் தபசென்னும் தீயிலிட்டு வாட்டி வசப்படுத்த வேண் டும். பக்திரசத்துடன் கூடிய தபசில் ஆதியோடந்தம் துன்ப மென்பது அணுவளவும் கிடையாது. ஆதலால் ஒருமை மனதாக அல்லலற்றிருக்க, அவனது அடியிணையில் இன்புற் றிருக்கப் பயிலுவோமாக.

"ஈசான்ய ஞான தேசிகர்"

[அ. ந. ப. திருஞானசம்பந்தன்]

தோற்றுவாய்: முடிசார்ந்த மன்னரும் முடிவில் ஒரு பிடி சாம்பலாவதும், சட்டகம் முடிவில் சுட்டெலும்பா வதும் உண்மை என உணர்ந்தவர்களே தவச் செம்மல்கள். என்றும் நிலைத்து, பரிபூரணனந்தம் அளிக்கும் பொருளில் தங்கள் கருத்துக்களைச் செலுத்தி, வாழ்வெனும் முட்புதர் கள் அடர்ந்த காட்டில் உள்ள மாயை என்ற நச்சுப் பாம் பையும், ஆணவம் என்ற சீறிவரும் புலியையும், கன்மம் என்ற சிங்கத்தையும் வீழ்த்தி, வாய்மை என்ற இளமரங்கள் அமைத்து, இன்பப் பூங்கா ஆக்கிப் புனிதமான நிலையில் அமர்ந்தவர்களே தவமுதாளர்கள். இவர்கள் நாட்டையும் நகரையும், மன்னர்களையும் மதித்து வாழ்ந்தவர்கள் அல்ல;

ஆனால் முன்கூறிய நாடு அவர்களை நாடியது; நகர் அவர்களை நெருங்கியது; மன்னர்கள் அவர்களைச் சார்ந்தனர். உயிர்க் கொலை போக்கிய உத்தமர்களாய், பொய்ம்மை என்றதோர் நச்சுப் பொய்கையில் முழுகாதவர்களாய், வஞ்சகப் புலனைந்தும் தன்வயம் அடக்கியவர்களாய், வாழ்வில் வழுக்கி வீழ்பவர்களுக்கோர் உண்மை வழி நடக்க எடுத்துக் காட்டாய் வாழ்ந்தவர்கள்தான் சாந்த சீலர்களான தவயோகிகள்.

உலகிடைப் பிறந்து, உழன்று, இறக்கின்ற கூட்டத்தின் எண்ணிக்கையை என்றும் அறுதியிடல் இயலாது. இறக்கின்ற கூட்டத்தில் நன்மை புரிவதில் நாட்டங்கொண்ட நலனுடைப் பெரியோர்களும், தீமை புரிவதில், இடுக்கண் வரினும் சற்றுந்தளராது உழைத்துப் பல நற்குடும்பங்களைக் கெடுத்தவர்களும் உண்டு. நல்லவன் இவ்வுலகை நீத்துச் செல்லுங்கால், அவனை வாயார மக்கள் பலவாறு புகழ்வர். தீயோன் இவ்வுலகை விட்டு இறந்தொழியுங்கால் வசையாக வசைக்கு ஆளாகிறான். எப்படிக் கண்டாலும் உலகில் தோன்றுகின்ற ஒரு மனிதன், எல்லோருக்கும் நல்லவனாக இருக்க முடியாது. ஒரு சாரார் நல்லோன் என அழைப்பின், மற்றோர் சாரார் தீயோன் எனவே அழைக்க முயல்வர். இது உலகின் போக்கு! நல்லோர்களுள்ளும், நல்லவர்கள் என வாழ்ந்தவர்களைப் பற்றித்தான் நம்மனோர் சிந்திக்க வேண்டும்! மறந்தும் கனவிலாவது சிந்திக்கிறோமா? அதுதான் இல்லையே! ஈமக்காட்டில் காணும் வெண்தலைகள் மக்களைக் கண்டு "வையத்தில் வாழ்வீர்காள்! நாங்களும் உங்களைப் போன்று சதைப் பொதி பெற்று வாழ்ந்தவர்கள்தான். பயனற்ற வாழ்வு வாழ்ந்தோம். செத்தும் எங்கள் ஓடுகள் அலைகின்றன. வாழுங்கால் உலக இன்பங்களிலேயே திளைத்து நின்றோம். பரமனை மறந்தோம். அது சமயம் மாயை சேர்த்துத் தந்த கருவூலமான பாவமூட்டைகளின் விளைவுதான், இன்று கேட்பார் அற்று எங்கள் வெண்தலைகள் உருளுவதின் காரணம். அதனால் நல் வாழ்க்கையில்

னின்று இறைவன் இன்னருளைப் பெறுவீர்களாக! அவனை வேடிக்கையாகக் கேளிக்கைகள் பேசும் முறையில், ஆடையால் பிறவற்றால் உடுத்தி வீணாக்காது, அவன் தத்துவம் அறிந்து வாழ்வீர்களாக'' என அறிவிக்கின்றன.

மேற்கண்ட உண்மையை அறிந்து, அதன்வழி தங்கள் இச்சையைச் செலுத்தி இயைந்து வாழ்பவர்கள்தான் தவப் பெரியார்கள். இத்தகைய பெருமக்களை ஏனைய நாடுகள் கண்டறிந்ததைவிட நம் நாடே பெருவாரியாகக் கண்டிருக்கிறது என்க! அத்தகையோர்கள் மக்கள் வாழ்வைச் சீர் செய்ய வந்த சிற்பிகள்; நிமலன்தன் கவசத் திருவெண்ணீறு பூசி மக்கள் உள்ளத்தை ஊக்குவிக்கும் உத்தமர்கள்; பாழ்த்த எண்ணங்களுக்கு நினைவைப் பறிகொடுக்காது, பரமனின் பாதத்தைப் பண்ணமைந்த பாடல்களால் நறுந் தமிழில் பாடி, நாட்டத்தை அவன்பால் இறுத்தி, மக்களின் சிந்தையைத் திருத்தி அமைத்த வள்ளல்கள். நெல்லுக் கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்குமாங்கே பொசிதல்போல, இறைவனும் இன்னருட் கடலினின்றும் இறைக்கப் பெற்ற தெள்ளமுதம் நல்லருட் பாதை வழியாய் ஓடி, தவமூதாளர்கள் உள்ளக் கேணியை நிரப்பி, அதன் விளைவாய் ஆத்ம சிந்தனையைப் பெருக்கி, ஞானப் பேருருக்குப் பாதை ஈதெனக் காட்டும் பெற்றியையும் நல்கி, அவ்விடத்தினின்றும், வழிந்ததோர் பகுதியே உலகியல் மக்களுக்குக் கிட்டும் என்பது உண்மை. அருளெனும் பெருநிதிக் குவியலைத் தன்னகத்தமைத்த முன்னர்க்கூறிய பெரியார்களுக்கிடையில், ஞாயிற்றொளியில் மெழுகுவத்தி எரிவதுபோல, சில போலிகளும் வாழத்தான் நேர்கிறது. நெல்லுக்கும் உமியுண்டு; நீர்க்கும் நுரையுண்டு; புல்லிதழ் பூவிற்கும் உண்டு என்ற நியாயம்பற்றி அவர்களைத் தந்தோம். அவர்களும் வாழ்வதால்தான் ஆராயும் மனப் பான்மை விரிந்து செல்கிறது. நல்லோர்களில், பெருமையுடன் பேசத் தகுந்த ஒருவர் வரலாற்றை இனிக் காண்போம். அத்தகைய பெரியார் யார்? அவர்தான் ஈசான ஞான தேசிகர் என்னும் பெருந்தகையார் ஆவர்.

வரலாறு: ஈசான ஞான தேசிகர் தோன்றிய ஊர் இராய வேலூராகும். இஃது திருவண்ணாமலையினின்றும் சுமார் 50 கல் அளவில் உள்ளது. சரித்திரத்தில் முக்கியத்துவம் பெற்றது. இங்கே ஓர் பழைய கற்கோட்டை, நாற்புறமும் அகழியால் சூழப்பெற்று உள்ளது. தற்போழ்து இக்கோட்டையில் எல்லா அரசாங்கத்தின் சிறந்த அலுவலகங்கள் உள்ளன. சுவாமிகள் தோன்றியகாலம் சுமார் 220 ஆண்டுகட்கு முன் எனலாம். சரித்திரக் கண்கொண்டு நோக்கின் அவர் வாழ்ந்த காலம் பிளாசிச் சண்டைக்கு முன்னதாகும். இவர் இயற் பெயர் கந்தப்ப தேசிகர் என்பது. இவர் தோன்றியது ஆதிசைவ வேளாளர் குலத்தில். இவர் தந்தையார் பெயர் திருநீலகண்ட தேசிகர். இவர் தாயார் பெயர் தெரியவில்லை. இவர் தந்தையார் நல்ல பக்திச் செல்வர். இவர் தனக்கு நெடுநாட்கள் பிள்ளைப் பேறு இன்மையால் வருந்தி, அருணையில் கோயில் கொண்டிலங்கும் முருகப் பிரான்பால் அயராத பற்றுக் கொண்டு வழிபாடியற்றி வந்தார். அதன் பயனால் தோன்றிய தவக் கொழுந்துதான் கந்தப்பராவர். இவரே பிற்றை நாளில் "புலியுடன் விளையாடும் புநிதராய்" விளங்கியவர். "விளையும் பயிர் முளையிலே" என்பதற் கேற்ப, தன் இளமைப் பருவத்திலேயே பிற்கால வாழ்விற்குரிய சில முற்குறிகள் அவர்பால் தோன்றின. பள்ளிச் சிறுவராய் வாழ்ந்த நாட்களிலேயே தன் வயதுக்கேற்ப விளையாட்டு முதலான கேளிக்கைகளில் தன் மனத்தைச் செலுத்தாது, எப்பொழுது பார்த்தாலும் நிட்டை கூடுவதிலேயே காலங் கடத்தலானார். இதைக் கண்ட உற்றாரும், பெற்றாரும், மற்றவர்களும் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. சிறு வயதிலேயே பக்குவப்பட்ட மனோநிலை கொண்டிருப்பதைக் கண்ட தேசிகர் தனயனுக்குச் சிவ தீட்சை முறைப்படி செய்வித்தார். கந்தப்பரும் வழிபாடு இயற்றி வருவதில் சற்றும் வழுவாது விளங்கினர். பதினாறு ஆண்டுகள் நிறைந்தன. உற்றவயது தன் மகனுக்குத் திருமணம் செய்விக்க வந்ததைக் கண்ட தேசிகர், பெண் பேசுவதில்

ஈடுபடலானார். இதற்கு மாறாக மைந்தன் உள்ளம் ஆத்ம ஞானம் பெறும் வழியையே நாடி நின்றது. தந்தையார் பெண் பார்க்க வெளியில் சென்றிருந்த பொழுது தன் தாயிடம் வந்து முறையிடலானார் கந்தப்பர். "அம்மா! நான் இல்லறமேற்று வாழ்வதைவிட எம்பெருமான் திருக்கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தலங்கள் தோறும் சென்று வழிபட்டு வர விரும்புகிறேன் என்றார். அன்னையாரும் அவருடைய எண்ணத்திற்குத் தடையொன்றும் இடாமல் இணங்கிவிட்டார்.

தாயிடம் விடைபெற்றார் கந்தப்பர். பூவுலகில் கோயிலென விளங்கும் தில்லைக்குச் சென்று வழிபடவேண்டுமென்று முடிவுசெய்து, ஊரைவிட்டுப் புறப்பட்டு இடையில் உள்ள தலங்களை யெல்லாம் வழிபட்டு, ஆங்காங்குள்ள புண்ணிய தீர்த்தங்களில் ஆடி, தியானங்கூடித் தான் எண்ணிய இடத்தைச் சென்றடைந்தார். குனித்த புருவம், கொவ்வைச் செவ்வாயில் குமின் சிரிப்பு, பனித்த சடை, பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறணிந்த தோற்றம், அம்பலக் கூத்தாடும் பொற்பாதம் இவைகளைக் கண்டு நிலை பேறான இன்பத்தில் ஆழ்ந்தார். கந்தப்பர், பெருமானை நினைதோறும், காண்தோறும், பேசுந்தோறும், அனைத்து எலும்பும் உள்நெகும்படியாய், ஆனந்த அருள் வெள்ளத்தைச் சொரிந்தார் பெருமானார். கனகசபேசனை தரிசித்த பின் குரு உபதேசம் கிடைத்தது. பெருமானார்க்கு என்றும் நந்தாத அகண்ட தீபக் கட்டளை யொன்று நிறுவி, தில்லைவாழ் அந்தணர்களிடம் செப்புப் பட்டயம் ஒன்று பெற்றபின், தில்லைக்குத் தென்பால் ஆயிகுளத்தின் வட கரையில் மௌன சுவாமிகள் தியான வாயிலாய் சமாதி நிலைபெற்று விளங்குகிறார் என்று கேள்வியுற்று ஆண்டுச் சென்றார். இவரே தனக்குரிய ஞானகுரு என்பதை அகக் கண்ணால் அறியலுற்றார்.

கந்தப்பரின் ஞானப் பேறு: தன் குருவைக் கண்டவுடனே, கந்தப்பருக்குத் தானும் துறவாடை பெற்று, சிவானந்தப் பேரமுதை உண்ணும் நிலையை எய்தல் வேண்

டும் என்ற அவா பிறந்தது. தில்லையிலேயே தங்கிக் காலையிலும், மாலையிலும் திருவமுது எடுத்துண்டு, குருவிடம் சென்று வழிபட்டு வாலானார். சின்னாட்கள் கழிந்தன. குருவோ இவரைக் கண்டும் காணாதவர்போல்பெயருக்கேற்ப சும்மாயிருந்து வந்தார். இது கண்ட சீடருக்கு "நாம் இன்னும் பக்குவம் அடையவில்லை போலும். அதனால்தான் குரு உபதேசம் செய்யவில்லை" என்ற எண்ணம் எழுந்தது. சீடர் தான் உடுத்திருந்த ஆடைகளைக் களைந்து கோவணங் கொண்டார். பற்களைக் கிட்டும் பனியுங் குளிரும் மிகுந்த மார்கழித் திங்களிலுங்கூடச் சீடர் சற்றும் அஞ்சாது கோவண தாரியாகவே யிருந்தார். நல்லமழை சோவெனப் பெய்தது, ஓர் நாள் எங்கு கண்டாலும் ஒரே வெள்ளக்காடு. அன்று கந்தப்பர், மழையையும், வெள்ளத்தையும் மதியாது சென்று குருவை வழிபட்டார். அது நோம் தேசிகரைக் கண்குளிர நோக்கினார் மௌன சுவாமிகள். சுவாமிகளின் மேல் யாரோ போர்த்திச் சென்ற கம்பள ஆடையை எடுத்து தேசிகருக்குப் போர்த்தினார். உணர வேண்டிய உண்மை ஈதென உணர்த்தினார் மௌன சுவாமிகள். அப்போழ்தே சீடரைத் தியானத்தில் அமரச் செய்தார்.

அந்தகாரப் புயலுக்குப்பின் தோன்றும் அமைதி எப்படியிருக்குமோ ? சொல்லாற்றல் நிறைந்தவன் கருத்துரைகள் கூறி முடித்தபின் மனத்தின் எழுச்சி எப்படியிருக்குமோ ? தடையின்றி ஓ என்ற இரைச்சலுடன் காட்டாற்று வெள்ளம் சென்றது, தடைபட்டு நிற்பின் எவ்வித அமைதி பிறக்குமோ ? அந்த விதமாக நிம்மதி பிறந்தது தேசிகருக்கு. அந்த நிம்மதியில் அன்றோ மெய்யுணர்வு விளங்கியது. "ஒளி வீசி உன் அருளுதயமாகிய பேரின்ப நிட்டை அருள்வாய்" என்ற சீடரின் மெய்ம்மை வேண்டுதலுக்கிரங்கிய குருமூர்த்திகள் அருளானந்தப் பெரு வெள்ள வடிவமாக ஞானமுத்திரை பிடித்து உண்மையை உணர்த்திவிட்டார். சீடர் தன் குருமூர்த்தியின் பெயரில் "பஞ்சரத்தினம்" என்னும் தோத்திரப் பாமாலை ஒன்றணிவித்தார். பின்னர் சித்தர்களுக்குரிய யோக

தண்டு யோகப் பட்டை முதலிய கைக்கொண்டு புறப்பட்டார் கந்தப்பர்.

நிட்டை கூடலும் இடையூறும்: சிதம்பரத்தை விட்டகன்று, ஆரூரில் கோவில் கொண்டிலங்கும் தியாகராசப் பெருமானை வழிபடப் புறப்பட்டார். அங்கு நின்றும், திருநாகைக்காரோணம் செல்வான்வேண்டிப் புறப்பட்டு இடையில் உள்ள சிக்கல் என்னும் திருத்தலத்தை அடுத்த பொருள் வைத்த சேரியில், தவத்திரு. உகந்தலிங்க சுவாமிகள், தம் சீடர்கள் புடைசூழ அமர்ந்து, அவர்களுக்கு ஞானச் செல்வம் புகட்டுவதைக் கேள்வியுற்று, அவ்விடம் சென்று சுவாமிகளை வழிபட்டார். அங்கு சில நாட்கள் தங்கிப் பெரியாருடன் உரையாடிக் கொண்டிருந்தார். அது காலைதான் நிர்விகல்ப சமாதிகூட வேண்டும் என்ற அவா அவர் உள்ளத்தில் எழலாயிற்று. சுவாமிகளிடம் விடை பெற்று வடதிசை நோக்கி வரலானார். திருவண்ணாமலைக் கடுத்த சுமார் 20 கல் அளவில் உள்ள வேட்டவலம் என்ற கிராமத்தைச் சேர்ந்து, மலையில் ஒரு குகையில் யாரும் அறியா வண்ணம் சில யாண்டுகள் சமாதி கூடியிருந்தார். அப்பொழுது, அவ்வூரைச் சார்ந்த முத்துசாமி உடையார் என்பவர் தாம் மேய்த்து வந்த ஆவினங்களில் பால்கறந்து நாள்தோறும் தேசிகருக்குக் கொடுத்து வந்தார். ஞானச் செல்வருக்குச் செய்யும் தொண்டு பயனற்றுப் போகுமா?

உடையார் வீடுகட்டுவதற்குக் கடைகால் எடுத்தார். அவருக்கு ஒரு பெருநிதிக் குவியல் கிடைத்தது. ஞானப் பெரியாரின் அருளினால்தான் தனக்குப் பெருநிதி கிடைத்த தென்றுணர்ந்தார். இதைக்கண்ட ஊராருக்குப் பேராசை பெருகிற்று. "குகையில் தவம்புரியும் பெரியாரின் அருள் வயத்தால்தான் உடையாருக்கு செல்வம் வந்திருக்கிறது" என்று ஊர்மக்கள் நம்பி, கூட்டங் கூட்டமாகத் தேசிகரிடம் சென்று, அவர் நிட்டைகூட ஓய்வில்லாதபடி தொந்தரவு விளைவித்தனர். அதைப் பொறுக்க முடியாத தேசிகர் அவ்விடத்தை விட்டு மேற்றிசையாய்ப் புறப்பட்டு அருணைக்கு வரலானார்.

தேசிகரின் திருவண்ணுமலை வருகை: திருவண்ணு மலைக்குத் தென்பால் உள்ள கோரக்கநாதர் குளக்கரையில் தங்கி நிட்டை கூடியிருந்தார். மாடு மேய்ப்போர் பால் முதலான உணவுப் பொருள்களை அளித்து வந்தனர். தேசிகரும் அவைகளை மனமுவந்து ஏற்ருர். யாரிடமும் சொல்லாமலே, வேட்ட வலத்தினின்றும் புறப்பட்டுச் சுவாமிகள் வந்து விட்டதால், அவ்வூர்வாசியும் சுவாமிகளைப் பேணியவருமான முத்துசாமி உடையார் ஏக்கத்தில் ஆழ்ந்தார். அண்ணுமலை அண்ணல் தேசிகர்போல் அவர் கனவில் தோன்றி, "அப்பா! நீ வருந்தற்க! அருணுசலத் தின் ஈசானபாகத்தில் இருக்கிரேம்" என்று அறிவுறுத்தி வருமாறு கட்டளையிட்டார். அண்ணுமலை அண்ணல் தேசிகருக்கும் திருக்காட்சி தந்து, "அப்பா! உன்னைக் காண ஒரு அன்பனை யாம் ஈசான்ய திசைநோக்கி வரச் சொல்லியிருக்கிரேம்" என்று அருளி மறைந்தார்.

பெருமானுரின் திருவருட் கருணைத்திறனை வியந்து அவர்மேல் தோத்திரப் பாமாலை என்னும் சில அருட்பாடல் களைப் பாடினர். பாடிய வண்ணமே ஈசான்ய திசைக்கு எழுந்தருளி, மாமரங்களும், செடிகளும், கொடிகளும், புதர்களும் அடர்ந்திருந்த ஈசான்ய தீர்த்தத்தின் தென் கரையில் உள்ள ஒரு பெரிய ஆலமரத்தின்கீழ் சிவயோக சமாதியில் அமர்ந்தார். இவ்வண்ணமே அருணையாரின் கருணையைப் பெற்ருர்.

கோரக்கநாதர் குளக்கரையில் நிட்டை கூடியிருந்த காலத்தில், அவ்வூர் வாசியான அருணுசலம் செட்டியார் என்பவர் நெடுநாட்களாய்த் தமக்குப் புதல்வன் இல்லா மைக்கு வருந்தி சுவாமிகளைக் கண்டு வணங்கி, தொண்டு புரிந்து வந்தார். இப்பெரியாரின் போருளால் தனக்குப் புதல்வர்ப் பேறு கிட்டும் என்று நம்பினர். வெற்றிக்கு நம்பிக்கைதானே அவசியம்! அருணுசலஞ் செட்டியாருக்கு வேலாயுதம் என்ற புதல்வர் தோன்றினர். வேலாயுதம் செட்டியாரின் புதல்வரான முருகப்ப செட்டியாரும் தமது பாட்டனருக்குத் தேசிகர் பெருமான் அளித்த திருவெண்

ணீற்றை வழிபட்டு வந்தார். அக்குடும்பத்தினர் இன்றளவும் அவ்வெண்ணீற்றுப் பையை வைத்து, வழிபாடியற்றி நிவேதனம் செய்கின்றனர். அதனால் அவர்களுக்கு வருகிற இடையூறு மறைகிறதை உணர்கிறார்கள்.

தேசிகரின் அருள் நிட்டை: தேசிகர் பெருமான் நிட்டை கூடியிருக்கும் காலத்தில், இடையூறின்றும், ஜோதபடி, வரிப்புலிகள் காவலாய்ப் படுத்திருக்குமாம். நிஷ்டை கலைந்ததும், தேசிகர் பெருமான் "அண்ணாமலையாரே இவ்வடிவந்தாங்கி நமக்குக் காவலாயிருக்கிறார்" என மகிழ்வுற்று "அண்ணாமலையே! எம்பெருமானே! என அழைத்துப் புலிமீது தம் கைகளால் தடவிக் கொடுப்பார். ஞான நிட்டையிலிருக்குங்கால், அன்பர்கள் தரிசிக்க வந்தபோது "அவர்கள் அஞ்சுவர்; சற்றே விலகியிருங்கள்" என்று புலிகளைக் கூறுவதுண்டு. மெய்யன்பிற்கும், யோகத்திற்கும் காட்டுப்புலிகள் வசமாகுமன்றோ! "காடி வெம்புலி வாயையுங் கட்டலாம்" என்ற தாயுமானர் திருவாக்கைச் சிந்திக்க.

தேசிகரின் செயற்கரிய செயல்கள்: காட்டுப்புலிகளைத் தனக்கு அடங்கச் செய்யும் தவவன்மை பெற்றாருக்கு; நாட்டு மக்களுக்கு உற்ற துன்பத்தைப் போக்குவது கடினமாமோ! கூடலூரைச் சார்ந்த புதுப்பாளையம் என்னும் கிராமத்தில் வசித்த ஒரு நாயக்கர் தமக்கு உற்ற சூலை நோயால் வருந்திக் கொண்டிருந்தார். அவர் அண்ணாமலை அண்ணலை வலம்வந்து, தேசிகர் பெருமானை வழிபட்டார். அப்பெரியாரின் கருணையால் அந்த நோய் விலகிற்று.

அக்காலத்தில் தென்னாற்காடு மாவட்டத்திற்கு அதிபராயிருந்தவர் ஐடன் துரையாவார். அவர் தேசிகர் பெருமானின் பெருமையைக் கேள்வியுற்று வந்து வணங்கினார். தேசிகரின் அருளால் துரைக்கிருந்த இருமல் நோய் நீங்கிவிட்டது. துரை மிக்கப் பணிவோடு சுவாமிகளைக் கண்டு "தங்களுக்கு எவ்வளவு நிலம் வேண்டுமெனினும் அடியேன் தருகிறேன்" என்றார். அதற்கு அவர் "பெருங் குடும்பத்தைத் தாங்கும் அண்ணாமலையானுக்கு அளிக்கின்

தரும். துறவியான நமக்குத் தகாது என்று சொல்லி" அண்ணாமலையைச் சுட்டிக்காட்டினார்.

ஒரு சமயம் அதிக மழைபெய்து பெண்ணையாற்றில் பெரு வெள்ளம் பெருக்கெடுத்தோடி வந்தது. அண்ணாமலை அண்ணலின் கார்த்திகைத் திருவிழா அணித்தேயிருந்தது. அதிலும் தேர்த் திருவிழா மாவட்ட அதிபர் வந்தே நடைபெற வேண்டும். அதற்காக ஐடன்துரை குதிரை மேல் வந்து கொண்டிருக்கும் பொழுது, பெண்ணையாறு தடைசெய்தது. அக்கரையிலே குதிரைமேலிருந்த வண்ணம் "குதிரையே! தாத்தாவைப் பார்க்கவேண்டும்; தேரைநடத்தவேண்டும்" என்று சொல்லிக் கொண்டே குதிரையோடு ஆற்றில் இறங்கினார். அப்போது, தேசிகர் பெருமான் தாம் இருந்த இடத்தில் தியானத்திலிருந்து கண்விழித்துத் தென்புறமாகத் திடீரென்று கையை நீட்டி இடது புறமாக மெதுவாய் தாழ்த்தினார். அதனை அருகிருந்து பார்த்த நாகை இராமலிங்க சுவாமிகள் தேசிகர் பெருமானின் அந்தச் செயலுக்கு உரிய காரணத்தை அறிய விரும்பினார். அதற்கு அவர் "எவன் ஆற்றில் விழுந்தாலும் அதற்கு நாம் உத்தரவாதியாக வேண்டுமாம்" எனறு விடை கூறி மௌனமாயிருந்தார். துரை சுகமாக வந்து சேர்ந்து தேசிகர் பெருமானை வணங்கி, "தேவரீரது இன்னருட் கருணையால் ஆற்று வெள்ளத்தைத் தாண்டி வந்தேன்" என்று சொல்லி மகிழ்ச்சிக் கடலில் திளைத்தார். இத்தகைய தேசிகரின் திருவிளையாடல்களைக் கேட்ட அன்பர்கள், இடைவிடாது பார்த்து வழிபடச் சென்றனர். அவர்களில் பக்குவம் மிகுந்தோர்க்கு "ஞானக் கட்டளை" எனும் பெயருள்ள ஓர் அரிய நூலினை இயற்றி உபதேசிக்கலானார்.

திருவண்ணாமலைக்கு அடுத்த மண்ட குளத்தூரில் வாழ்ந்துவந்த சபாபதி சுவாமிகள் காஞ்சி காமாட்சி யம்மையின் அருள்பெற்று, ஈசான்ய தேசிகரை அடைந்து தொண்டாற்றி வந்தார். தேசிகர் பெருமான் அவரைத் தியானத்தில் அமரச் செய்தார். சபாபதி சுவாமிகளுக்கு வடமொழியில் தேர்ந்த புலமை யுண்டு. எனவே, "அறிவுத்

தொண்டு செய்து பின்னர் நிட்டை கூடும்" என்று தேசிகர் பெருமான் அருளினர். அங்ஙனமே சுவாமிகள் மேட்டுப் பாளையம் சென்று, சீடர்களுக்கு வேதாந்த பாடம் புகட்டிச் சிறப்புடன் விளங்கி வந்தார். அவ்விடத்தும் மடமும் ஆலயமும் கட்டப்பெற்று நித்திய வழிபாடு முதலியன நடந்து வருகின்றன. தற்பொழுது அந்த மடத்திற்கு அதிபாய் இருந்து வருபவர் தவத்திரு நடேச சுவாமி களாவர். இவர் சான்ற தவச்சீலர்; அடக்கத்தின் கரு வூலம்; மறை மொழியாளர்.

ஞானதேசிகர் பெருமான், இறைவன் இணையடிகளை அடையும் நாளை முன்பே நறுக்கு ஒன்றில் வரைந்து ஆசனத்தின்கிழ் வைத்துவிட்டார். குறித்த நாளன்று தம் சீடர்களை நோக்கி, "ஆடலழகப் பெருமான் அறைக் கட் டுக்குப் போகிறார், நாமும் அங்கே போக வேண்டும்" என்று திருவாய் மலர்ந்தருளினர். தேசிகர் பெருமான் பத்மாசனம் இட்டு, சின்முத்திரை தரித்து, சமாதி கூடித்தொழுவார் வினையயறுக்கும் பெருமானின் திருவடிக் கமலங்களைச் சேர்தற்கு ஆயத்தியமாய் இருக்குங்கால் முத்துசாமி உடை யார் "அடியேங்களுக்குக் கதி யாதோ?" என வினவினர். அதற்குப் பெருமானர் "உமது குடும்பம் முன்னமே கொத் தோடுபழுத்துப்போயிற்றே!" என்று திருவாய்மலர்ந்தருளி, இன்னருட் பெருமனின் இணையடிகளை அடைந்தார். அவர் அடைந்த காலம் (1751) விரோதி யாண்டு, மார்கழித்திங்கள் 26-ம் நாள், மிருகசீரிட விண்மீன் கூடிய நன்னாளாகும். தேசிகர்பெருமான் சிலகாலம் ஆசிரமத்திற்கு அருகாமையில் உள்ள வில்வமரத்தருகில் சென்று பெருமானை வழிபட்டுவந் திருந்த குறிப்பை உணர்ந்தவர்கள், அவ்விடமே ஏற்றதென் றறிந்து திருமேனியைச் சமாதி செய்தனர்.

சுவாமிகளின் பூதவுடற் சமாதியும் மடத்தின் நிலையும் : சுவாமிகளின் பூதவுடற் சமாதி ஊரின் ஈசான்ய மூலையில் அமைந்திருக்கிறது. சமாதி ஒரு சிறந்த கோவிலாக அமைக் கப் பெற்றுள்ளது. இதனை அமைத்தவர்கள் வேட்ட வலத்தைச் சார்ந்த உடையார் பரம்பரையினர் எனத் தெரிய

வருகிறது. காலையிலும், மாலையிலும் செவ்வனே வழிபாடு நிகழ்ந்துவருகிறது. இறையருட் தொண்டு புரிதற்காகச் சுமார் பதின்மருக்குக் குறைவில்லாத அடியார்கள் அம் மடத்தில் உள்ளார்கள். மாலையில் நடைபெறும் வழிபாடு ஒவ்வொருவரும் காணுதற்குகந்தது. மாலை 6½க்கு வழி பாடு தொடங்குகிறது. அடியார்களில் ஒருவர் சமாதிக்குப் பூசை செய்விக்கிறார். ஏனைய அடியார்கள் கண்குளிரக் காண்கிறனர். மேளதாளங்கள் முழங்க, பூசை நடைபெறு கிறது. சுவாமிகளின் பூதவுடற் சமாதியின் அணித்தே வடபால் ஒரு பெரிய தீர்த்தமுளது. அதுவே ஈசான்ய தீர்த்தம் என்பதாகும்; சமாதியின் பக்கலில் ஒட்டியே தென்பால் பெரியமாடிக் கட்டடங்களுடன் விளங்குவதே ஈசான்ய மடமாகும். இஃது சிறந்த முறையில் அமைக்கப் பெற்றிருக்கிறது. இம்மடத்தைச் சார்ந்த நிலச் சொத்து கள் நிறைய இருப்பதாய் அறிய முடிகிறது. பொதுவாய் நோக்கின் மடம் சிறந்த முறையில் காலத்திற்கேற்ற வகை யில் குறைகூற வழியில்லாமல் நடைபெற்று வருகிறது. இன்னொரு போற்றத்தகுந்த செய்தி. திக்கற்ற ஏழைச் சிறுவர்கள் அறுவருக்கு, உண்டியும், உறையுளும் தந்து, தேவார பாராயணத்தை நாடொறும் அவர்களைச் செய்து வர ஏற்பாடு செய்துள்ளது வரவேற்கத் தகுந்த ஒன்றாம். அம்மாணவர்கள் அத்துடன் வேலைக்குரிய, உயர்நிலைப் பள்ளிப் படிப்பும் பயில்கின்றனர். அமைதியான, தூய்மை யான, ஒழுக்கம் நிறைந்த தவச்சீலர்களுக்கிடையில் இருந்து கல்வியைப் போற்றி வரும் மாணவர்கள் நன்னிலை எய்துவது எளிதென்பது துணிபு. இவ்வளவு செயல்கள் புரிவதற்கும் காரணமாய் ஒருவர் இருக்கவேண்டுமல்லவா? அவர் யார்? அவர்தான் தற்போழ்து மடத்தை மேற்பார்வை யில் வைத்துள்ள இராமநாத அடிகளாராவர். அடிகள் நாட்டுக்கோட்டை நகரத்தாரின் தனிப்பெருமரபில் தோன்றி, துறவுபெற்று வெளிவந்தவர்கள். எப்பொழுதும் இன்முகப் பொலிவோடு விளங்குகிறார். செய்ய முடியாத செயல்களுக்கு, மணிக்கணக்கில் பேசும் ஆற்றல் படைத்தவர்களை அதிகமாய்க்

காண்கிறோம். இந்நாளில் சில கூறி, பல செயல்கள் ஆற்றும் சில்லோரைத்தான் நாம் அருகியே காண இயலும். அத்தகைய பெருமக்களுள் தலையாயவராக எண்ணத்தகுந்தவர் தான் தற்போழ்து மடத்தில் இருக்கும் அடிகளார். எடுத்த நற்காரியத்தைச் செய்துமுடிப்பதில் திண்ணமான எண்ணங் கொண்டவர். பல பெருந்தவச்சிலர்கள் வாழ்ந்த இடங்களைக் கண்ணுறும் பொழுது, மனம் வேக்காடடைவது உண்டு. அதற்குமாருக ஈசான்யமடத்தைக் காணுங்கால் உள்ளத்தில் தண்ணென்ற அருவி பாய்வதுபோலிருக்கிறது. காரணம் மடத்து வளர்ச்சியில் ஈடுபாடுகொண்டவர்களையே அம்மடம் அப்போதைக்கப்போது பெற்று வருவதுதான். தவத்திரு. மகாதேவ சுவாமிகள், தவத்திரு. இராசா சுவாமிகள் ஆகிய இருபெருஞ்செல்வர்களால்தான் ஈசான்யமடம் உருப்பெற்ற தென்பது ஈண்டு நினைக்கற்பாலது. இம்மடம் நீண்டு நிலவி நாட்டு மக்கள் தொகுதிக்கு ஓர்பால், இன் அறிவுத் தொண் டாற்ற முந்தும் என்று எண்ண இடமிருக்கிறது. இம்மடத் தைச் சார்ந்த சிறந்த நூல்நிலையம் உள்ளது. இரண்டு பெரிய பீரோக்களில் புத்தகங்கள் இருப்பினும், எல்லாம் பழைமைப் புத்தகங்கள். பயன்படுத்துவோர் தோன்றினல் மிகுதியாக நலங்கொழிக்குமென்க. கார்த்திகைத் திருவிழா நாட்களில் பல இடங்களினின்றும் எழுந்தருளும் அடியார் திருக்கூட்டம் இம் மடத்தையே வசதியாகத் தங்கக் கொள் கிறது. எதிர் காலத்தில் அம்மடம் சிறந்ததோர் பல்கலை புகட்டும் கல்லூரியாயினும் ஆகலாம். ஞானப் பேருருக்கு வழிகாட்டுங்கால், கல்வி மக்கட்கு எவ்வளவு அவசியம் என்பதை ஞானதேசிகர் பெருமானே எடுத்துக்காட்டியுள் ளார் எனின், அக்கல்வி பெருகி, பல்கி, வளர அவ்விடம் துணையாய் நிற்காதோ ?

ஈசான்ய ஞானதேசிகரின் அரும்பாடல்கள் :

1\. அருளுருவா யனல்வடிவா யயன்மாலுக் கெட்டரிதா
யகண்டா காரப்
பொருளெனவே நிச்சயித்து நின்னடியார், நின்பெருமை
புகழ்ந்தார் நின்னைக்

குருவெனக்கண் டபிசயமாய்க் கொண்டனன்யா னென்னென்ன
கூறி னாலும்
பெருமைபுக ழருணகிரிப் பெம்மானே யென்றுயான்
பேசு கேனே.

விருத்தம்

2. கற்றதுங் கேட்டதெல்லாங் கடவுளர் செயலேயென்று
நித்தமு நினையுமன்பர் னிறைந்த பூரணமாய் நீங்காப்
பெற்றதும் பிறவாஞானம் பெற்றபோறிவை யுள்ளோர்
நித்தமும் நினைவார் நீங்கார் நித்தியானந்தன் தானே.

3. மனமென்று மாயைத் திரையின்றி வாழும்நத்து வர்தான்
றனையன்றித் தத்துவ மெங்குளதோ சச்சி தானந்தமாய்
நினைவின்றி நின்றநிலையே நிலையுண்மை நிட்டையதாய்
வினையின் றித்தன்னிலை வீடாகப் பெற்றிடும் வித்தகரே.

கண்ணி

4. ஐயமொரு காலுமிலா ஞாயம் போனிறைந்த
மெய்யன்திரு வருளை மேவுவது மெய்யுணர்வே.

தோத்திரப் பாமாலை

5. பொல்லாத மனமெனும் பேய்பிடித் தைம்புலப்
பூதங்கள் பயமுறுத்தப்
பொய்யான லோகமும் மெய்யாக என்முனே
போராடி நிற்குதந்தோ
கொல்லாது கொல்லுதே காதல்மா மோகங்
குணங்கள் வினையால் மலிந்து
கூரான வேல்விழி மாதரென் கின்றதோர்
கூபத்திலே வருந்திங்
கெல்லாரு மேசவே நெஞ்சந் திடுக்கிட்
டிறங்கியேதலை சாய்க்கவோ
என்னைப் படைத்து விட்டாயிந்த உலகினில்
எளியேனை ரக்ஷி கண்டாய்,
அல்லாது சும்மா இருந்து விட்டாலடிமை
யார்பா லெடுத்து மொழிவேன்
அத்தனே நித்தனே அருணை யுண்ணாமுலை
அம்மைதன் மணவாளனே!

பாநுகவியார் தேசிகரைப் பற்றியளிக்கும்கருத்தோவியம்: பாநுகவி சுவாமிகள் மடத்தின் சீடர்களிலொருவர். இவர் இருமொழியிலும் பெரும் புலமைபெற்றவர்கள். இவர் கந்தபுராணத்திற்கு எழுதியுள்ள உரை புலவர் பெருமக்களால் போற்றிக் கற்கப்படுகிறது. இவரது சொந்தவூர் திருவிதாங்கூர் பகுதியென்றறைகின்றனர். இவருடைய மாணவர்கள் பொதுவாக வடார்க்காடு மாவட்டத்திலும், சிறப்பாகச் சேயாற்றிலும் உள்ளனர். அவருடைய மாணவர்களில் இன்று தலையாய இடம் பெற்றுள்ளவர் முத்தமிழ் பெருஞ்சொற் கொண்டல் புரிசை முதலியாராவார். சுவாமிகள் தேசிகர் பெருமான்பால் "நெஞ்சுவிடுதூது" என்றொன்று அருளியுள்ளார். அதில் அவர் கூறும் கருத்தோவியம் என்ன என்பதைக் கலிவெண்பாவால் காணலாம் :

ஓங்காரத் துள்ளேஉறும் பொருளாய் உத்தமர்கள்
ஆங்கார மின்றி அறைமனுவாய்த்—தூங்காமல்
உற்றோர்தம் சிந்தை உயர்ஆ தனமீதே
பற்றோடு நின்ற பரமாகிக்—கற்றோரும்
கல்லாக் கயவரும் கண்ணிற் கதியளிக்கும்
உல்லாச ஞானஉயர் மறையின்—நல்ல
பொருளாகி நின்ற புனித அடியார்
அருளாரச் செய்யும் அழகன்—இருளார்ந்த
கண்டமொடு துண்டமதிக் கண்ணி யணிந்திதழி
மண்டுகனஞ் சிரத்தின் மன்னுவித்தோன்—அண்டர்
பணியும் அரிதன் பழங்கண் அறுத்தோன்
அணியும் புலியாடை அண்ணல்—தணிவில்
அருணகிரி நாதன் ஆனந்தன் என்றும்
கருணை உருவாம் கடவுள்—தரணி
புனலனல்நீள் காலாய்ப் புகழ்வெளியாய் எற்றும்
தனிமதியும் ஆன்மாவும் தானாய்—வினை வாருக்(கு)
அன்னதுவே யாகிஅமையும் அபிராமன்

என்று சிவபரம் பொருளைப்பாடிய பின்னர்,

எங்கள் இடர்தவிர்க்கும் ஈசானன்—தங்கக்
குருநாதன் ஞானக் குருநாதன் என்றும்
ஒருநாதன் ஆகும்உர வோன்—திருநாதன்
ஆனவனும் வானவரும் அண்மி யடிபணியும்
ஞானகுரு மாதேவன் நாயேன்றன்—ஈனவுடல்
ஆவியெலாம் கைக்கொண்ட அண்ணல் அடியேனை
நீதியுடன் ஆண்ட நிருமலனை—ஏதுமெலாம்
நீக்கி அடைந்தாரை நித்தியமாச் செய்தருளும்
பாக்கியனை பொன்னுடனே பன்னாளும்—எக்கமற
வாழ்மனமே நீபோய் வழிபாடு செய்குவையே
தாழ்த்தியல்ல என்பதுயான் தானறிவேன்—ஆழ்கடலின்
ஒத்த விழியாளை ஓர்ந்துற்ற அந்நாளில்
சித்தமே நீஅது வாய்ச் சேர்ந்தனையே—வித்தை
அதனை உணர்போதில் அன்னதுவாய் நின்றாய்

என்று அவர் புகழை வாயார 108 வரிகளில் பாடிச் செல்கிறார். அவர்தம் புலமைக்கேற்ப கற்பனை நயங்களையும் அறிவியல் கருத்துக்களையும் அமைத்தே பாடிச்செல்கிறார். முற்றிலும் படித்து இன்புறத் தக்கதாகும்.

முடிபு: இதுவரை ஒரு தேர்ந்த ஞானியின் வரலாற்றைக் கண்டோம். உண்மையறிந்தோம். மெய்ம்மையுணர்ந்தோம். இத்தகைய வரலாறுகளைப் படிப்பதால் நாம் பெறும் பயன் என்ன என்ற கேள்வி ஒவ்வொருவர் உள்ளத்திலும் எழத்தான் செய்யும். அங்ஙனம் எழுவதைத் தடை செய்யவும் முடியாது. எல்லோரும் காவியணிந்து, முடிவளர்த்துக் கானகம் ஏகுவதற்காக இத்தகைய வரலாறுகள் படிக்க வேண்டும் என்பது பொருள் அல்ல. காவியணிவதாலோ, முடிவளர்ப்பதாலோ ஈசான ஞானதேசிகராகி விடமுடியுமா? முடியாதன்றோ! பெரியோர்கள் உலகிற்கென அளித்துச் சென்ற அறவுரைகள் என்ன என்பதைப் பற்றிச் சிந்திக்கவேண்டிய எண்ணமாகிலும் எழுதல் வேண்டும்.

" நிறைமொழிமாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும் " என்பதன்றோ வள்ளுவர் பெருமான் வாக்கு. " நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த மறைமொழிதானே மந்திரம் என்ப " என்ற தொல்காப்பியர் கருத்தையும், ஒல்காப்புகழ் வளர நோக்குக. தவமுதாளர்கள் மறைமொழியே மற்றைநாளில் மந்திரங்களாக மாறின என்பதை நால்வேதத்தின் முடிவே நமக்கு அறிவிக்கும் உண்மை அல்லவா ? உண்மையை வளர்க்க, வளர்த்து அதன்வழி நடக்க ஒவ்வொருவரும் முயலவேண்டும் என்பதுதான் பெரியார்கள் வரலாறுகளைப் படிப்பதின் மூலம் அறிய வேண்டிய முற்றிய உண்மை.

பசியோய வேண்டின் உண்ணவேண்டும் ; காதலடங்க வேண்டின் மோகங் கொண்ட எப்பொருளெனினும் அதனைக் காணவேண்டும் ; ஏழை பங்காளனைக் காணவேண்டின் வண்டமிழால் ஏழை பங்காளனைப் போற்றல் வேண்டும். அதுபோழ்து தொண்டருக் கடக்கமான பெருமான் தோன்றுவான். இக்கருத்தை யளிப்பது யார் ? தாயுமான சுவாமிகள் தான். அப்பாடலைக் காண்க :

உண்டவர்க் கன்றி யுட்பசி யோயுமோ
கண்டவர்க் கன்றி காத லடங்குமோ
தொண்டருக் கெளியானென்றும் தோன்றுவான்
வண்டமிழ்க் கிசைவாக மதிக்கவே. (பொன்னை மாதரை)

எனவே, இறைவன்பால் காதல்கொண்டு, அவன் அருளாரமுதப் பெருவெள்ளத்தையுண்டு, பண்ணியற்றிப் பக்திமையோடு சூட்டி, தொண்டியற்றி வாழ்ந்தவர்களே தவமூதாளர் என்பதைக் குறிப்பாகத் தாயுமானர் மூலம் அறிய இயல்கிறது. அத்தகு நிலையிலெல்லாம் நின்றும், கிடந்தும், வழிபட்டும் உய்யு நெறி பெற்றவர்தான் ஈசான ஞான தேசிகப் பெருமானவார். அண்ணமலைக்கு அணியப் பெற்ற மணி விளக்காய்த் திகழும் அவரின் திருநாமம் தமிழகமக்கள் உள்ளத்தில் நின்று உயர்வையும், பேறுகளையும் அளிப்பதாக.

சைவ சமய நிலையங்களின் தற்கால நிலை

[மா. சிவநருநாதன்]

(மலர்–25 ; இதழ்–11 ; 480ம் பக்கத் தொடர்ச்சி)

இச் சிக்கனத் திருப்பணிகளை ஒருவரால் செய்ய இயலா விடத்தும், அவ்வாறு செய்ய முயற்சிப்போருக்கு மன முவந்து தம்மாலியன்ற பொருள் கொடுப்போர் அடையும் பயனை,

" திருப்பணி செய்வார்க்குஞ் சிவனையுன்னிச் செம்பொன்
விருப்புடன் ஈவார் பெறுகவீடு "

எனவும், இவ்வாறு விருப்புடன் ஈவார் பொருளை வாங்கி இப்பணிகளைப் புரிவோர் அடையும் பயனை,

" உய்வார் உதவு நிதிவாங்கித் திருப்பணியைச்
செய்வார் பெறுக சிவம் "

எனவும் நம் நூல்கள் அறிவிக்கின்றன.

இவ்வாறு மக்களது உதவியாலன்றி, அரசாங்கத்தின் பெருந்துணையாலேயே ஆகவேண்டிய நிலையங்களே பலவாய் உள்ளன. அதுபற்றி அரசாங்கத்திற்குச் சைவமக்களும், சைவசித்தாந்த மகாசமாஜம் போன்ற கழகங்களும் தூண்டு தல் செய்யவேண்டும். இன்னும் சட்டசபைக்கு ஒவ்வோர் வகை ஸ்தாபனங்களுக்கும் சில உறுப்பினர்களைச் சட்டப் பிரதிநிதிகளாய் அமரச் சட்டசபைகளில் இடம் விட்டிருப்பது போல், நம் சமய நிலையங்கள் சார்பாகச் சில இடங்களைக் கொடுப்பின், தற்போது இக்கோயில் முதலியவற்றின் பாதுகாப் புப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அரசாங்கத்திற்குப் பெருந் துணை கிடைக்கும். சமயப்பற்றுள்ள நல்ல பொதுநலத் திட்டங் கள் வெளிவரவும் இடமாகும். இவ்வாறு நியமிக்கும் உறுப் பினர்கள் சமயப் பற்றுடையவர்களாய் இருத்தல் வேண்டும். இவர்களைக்கொண்டு, திருக்கோவில்களின் முன்னேற்றத்திற்

கான கீழ்க்கண்ட குறிப்புக்களைப் பின்பற்றிப் பயன்பெறுதல் எளிதாகும்.

1. இக்கால ஜனநாயக ஆட்சியில் மக்கள் யாவரும் சமமென்றும், ஆதலால் மக்கள் யாவருக்கும் சமசொத்து ஏற்றத்தாழ்வில்லாது இருக்கவேண்டுமென்றும் சிலர் கூறுகின்றனர். இதனைப் பின்பற்றுமுன், உள்ளதெய்வம் ஒன்றேயாதலால், உண்டு என்றும் அது உறையும் கோயில்கள் யாவும் சமம் என்னும் முறையில் பெருங்கோயில்களில் எஞ்சியுள்ள தொகைகளில் ஒருசிறு பகுதிகளை இச்சிதைவுற்ற ஏழைக்கோயில்கட்குப் பயன்படச் செய்தல் சிறப்பாயிருக்கும்.

இக்காலத்தில் நமது சமயக் கொள்கை, பெருமை முதலியன யாவும் நூலளவோடும் பேச்சளவோடும் இருக்கின்றனவேயன்றிச் செயல் அளவில் இல்லை. பிற மதத்தவர்கள் பிறநாட்டில் இருந்து இங்குவந்து தம்மவருக்கேயன்றி மற்றவர்கட்கும் தங்கள் சமயம் பற்றிப் (பற்பல வகையில்) பிரசாரம் செய்யப் பிரசாரகர்களுக்குப் பயிற்சி தந்து அவர்களை ஊர்தோறும் அனுப்பிப் போதிக்கச் செய்கின்றனர். இவ்வாறு நம் சமயத்திற்கு மிக்க விரிவான முறையில் செய்தல் வேண்டும். தற்காலம் சிற்சில இடங்களில் பெயரளவில் மட்டும் சமயப்பிரசாரம் நடப்பது போதாது.

கோயில் பூசனை, நிர்வாகம் முதலிய கோயில் பணிகட்கு நியமிக்கப்படும் தொண்டர்கள் யாவரும் சமயப் பற்றும் சமயப்பயிற்சியும் பெற்றவர்களாயிருத்தல் வேண்டும். இக்காலத்தில் அரசாங்கத்தின் அலுவல்கட்குப் பலப்பலவகையில் பற்பல பயிற்சிக் கூடங்கள் அமைத்து உதவிப்பொருளும் கொடுத்து அலுவல்களில் பயிற்சி செய்விப்பது போன்று, இக்கோயில் பணித்தொண்டர்களுக்கும் பயிற்சிக் கூடங்களைப் பெருங்கோயில்களில் அமைத்தல் வேண்டும்.

தொடக்கப்பள்ளி முதல் கல்லூரிவரை உள்ள வகுப்புகளில் சமய உண்மைகளைத் தனிப்பாடமாகப் போதிக்க வகுப்பு நேரமும், அவற்றைச் செவ்வனே போதிக்கவல்ல

ஆசிரியரும் அவசியமான சமய நூல்களும் வேண்டும். இத் தேவைகளைப் பூர்த்திசெய்தற்கு உபரிவருமானங்களிலிருந்து ஒரு பகுதியைப் பயன்படுத்துதல் நீதியேயாகும்.

சில முக்கிய கோயில்களில் ஆராய்ச்சிக் கழகங்கள் நிறுவி, அவற்றினின்றும் சமய சம்பந்தமான புது நூல்களை யும், இதுவரை வெளிவாராது ஓலை வடிவில் இருந்து அழிந்து வரும் சுவடிகளையும், யாவரும் நன்குணர்தற்கேற்ற எளிய நடையிலும், சிறிய முறையிலும் பதிப்பித்துக் குறைந்த விலையிலும் இலவசமாயும் யாவருக்கும் கிடைக்கச்செய்தல வேண்டும்.

நம் சமய சம்பந்தமான செய்திகள், பெருமைகள் வர லாறுகள் முதலிய பலவும் கோயில் செலவில் வெளிவரும் பத்திரிகைகளில் இடம்பெறச் செய்தல் வேண்டும். இதற் கெனவே பல வார, மாத இதழ்களைப் பார்த்ததும் மக்களைக் கவரும் வகையில் (கல்கி, விகடன் போன்று), சமயக் கருத் துடை வண்ணப்படங்களுடனும் பல கதைகள் முதலியவற் றுடனும் பதிப்பித்து எளிய விலையில் எங்கும் பரப்புதல் வேண்டும்.

பிற மதத்தவர்கள் பல்வகை நிலையங்களை (அதாவது வைத்திய சாலைகள், அநாதை விடுதி, பள்ளிக்கூடம், தொழிற் கூடம்) முதலியவற்றாலும், இன்னும் வாழ்க்கைக்கு வேண்டிய பல்வகை உதவிகளாலும் மக்களை வயப்படுத்தித் தம் மதத்தில் விருத்தி செய்வதை ஒப்ப இதுபோன்ற நிலை யங்களை ஏற்படுத்தல் வேண்டும்.

தற்காலம் பல கோயில் நிர்வாகத்தில் கையாளப்படும் சிக்கன முறையால் ஆகம முறைக்குப் புறம்பாகப் பூசனை முதலியன நடத்தப்படுகின்றன. இதனை இவ்வாறே ஒவ் வோர் வழியிலும் கையாளத் தலைப்படின் முறை முறறிலும் மாறி தெய்வீகத் தன்மை அற்றுவிடும். செலவினைக் குறிக் கும் குறிக்கோளைக் கொண்டு இத்தகைய அவசியச் செலவு களைக் குறைக்கலாகாது.

தற்காலம் கோயில் குளங்கள், நந்தவனங்கள், வேதாகம திருமுறைப் பாடசாலைகள், பசுமடங்கள், யாத்திரைவாசி

விடுதிகள் முதலியன பண்டுபோல் சிறந்து விளங்கல் வேண்டும்.

கோயில் தரிசனம் செய்ய யாவருக்கும் எக்கோத்திலும் உரிமையும் வசதியும் அளித்தல் வேண்டும். இரவினைத் தவிர்த்து, பகற்கால முழுதும் தரிசிக்கவும், சிற்சில இடங்களில் உள்ள கட்டண வசூலை நிறுத்தவும் வழிசெய்தல் வேண்டும்.

ஒவ்வோர் தலவூர்ப்புறத்தில் பல இடத்தும் தல வரலாற்றுத் தொடர்புடைய இடங்களில் விசனிக்கத்தக்க முறையில் உள்ள உருவங்களைச் சிறப்படையச் செய்தல்வேண்டும்.

கோயில்மீது முளைத்துள்ள மரம், செடி, புல் முதலியவற்றைக் களைய உழவாரப் பணியாளரைக் கட்டாயமாக நியமித்தல் வேண்டும்.

இவை யாவற்றினும் முதன்மையாக, சிதைவுற்றுவரும் கோயில்களைக் கவனிக்க ஓர் தனி அலுவல் குழு ஒன்று அமைத்து, அதன்மூலமாய்க் கோயிலின் சிதைவுற்ற நிலை, அதன் வரலாறு, சொத்து விபரம் முதலியவற்றை அறிந்து கொண்டு குறைகட்குப் பரிகாரம் தேடவேண்டும்.

இவைபோன்று இன்னும் பலப்பல வகைகளில் திருக்கோயில்களை முன்னுக்குக் கொண்டுவர யாவரும் சிறப்பாய்ச் செல்வர்கள் முன்வரல்வேண்டும். அவர்கள் தங்கள் இவ்வுலக வாழ்க்கைக்கு மட்டும் சேமிப்பதோடன்றி, இனி வரும் உலகத்தில் தாம் நெடுங்காலம் இருக்கப் பயனுகுமாறு இக்கோயில்களை நன்னிலைக்குக் கொணர்தல் வேண்டும். இவ்வாறு நம் சமய நிலையங்கள் சீர்ப்பட தெய்வத்திருவருள் நம்முன் நிற்பதாகுக.

> " வான்முகில் வழாது பெய்க; மலிவளம் சுரக்க; மன்னன்
> கோன்முறை அரசு செய்க; குறைவிலா துயிர்கள் வாழ்க
> நான்மறை அறங்கள் ஓங்க ; நற்றவம் வேள்வி மல்க
> மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்

——

தெய்வமணங் கமழும் திருக்குறள்*

வித்துவான்-பண்டிதர்-கா. பொ. இரத்தினம், M.A., B.O.L.

திருக்குறள் எனும் தெய்வநூல் இரண்டாயிர ஆண்டு கட்கு முன் தோன்றியது; அன்றுதொட்டு இன்றுவரை அறிஞர்கள் யாவராலும் போற்றப்பட்டு வருகிறது. பல் வேறு சமயத்து மக்களும், பல்வேறு மொழிகளைப் பேசும் மக்களும் இதனை ஒரு பொதுமறை எனப் புகழ்கின்றனர்; உலகம் முழுவதற்கும் பொதுவான ஒரு நூலைத் தந்த வள்ளுவனை வாயார வாழ்த்துகின்றனர்.

" இவை தெய்வ வாக்குக்கள்; இவை வேதப் பிரமா ணங்கள்; இவை குருவின் கட்டளைகள்; இவை முனிவர் கள் கண்ட முடிபுகள். ஆதலால் இவற்றை முழுதும் நம்ப வேண்டும்; இவற்றினை ஆராய்தல் பெரும்பாவம். இவற்றை ஆட்சேபித்தால் நரகத்திலே புரளுவீர்கள் " என்று கூறி மக்களுடைய பகுத்தறிவை - சிந்திக்கும் ஆற்றலை - ஆராய்ச்சி மனப்பான்மையை - சிதைத்த நூல்கள் தாண் டவமாடிய நாட்டிலே திருக்குறள் தோன்றியதெனினும் " எப்பொருள் எத்தன்மைத் தாயினும், யார்யார்வாய்க் கேட் பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு ' என்று முழங்கியது. " மக்களை நன்கு படியுங்கள், ஆராயுங்கள், சிந்தியுங்கள், உண்மையைக் காணுங்கள், உண்மை வழியில் நில்லுங்கள் " என்று ஏவியது. ' உங்கள் நெஞ்சே - பகுத் தறிவே - மனச்சாட்சியே உங்களுக்கு வழிகாட்டி ' என்று உரைத்தது. தன்னை உயர்த்திப் பிறரை இகழ்தல் அறி யாமையும் அநியாயமுமாகும். தன்னைத் திருத்திப் பிறரும் இன்புறத் தானும் இன்புற்று வாழ்தலே அறவாழ்வு - அமர வாழ்வு - என்று இயம்பியது. இத்தகைய அரிய பெரிய சிறந்த நூலை இக்காலத்திலே தமிழ் மக்கள் நன்கு படித்துப் பயனடைகிறார்களா? அடையவில்லையென்றே நான் கூறு

*கொழும்பில் நடந்த திருக்குறள் மாநாட்டில் நிகழ்த்திய தலைமை உரைச் சுருக்கம்

கிறேன். சாதாரண மக்கள் மாத்திரமா? படித்தவர்களும் பயனடையவில்லை என்றே கூறவேண்டும். சிறிது காலத்துக்குமுன், கோவில்களிலே இடப்படும் உயிர்ப்பலியையும், தீண்டாமையையும் நீக்குதற்கு அறிஞர்கள் சிலர் முயன்றபொழுது நம்மக்களிற் சிலர், விசேடமாக யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்கள், அவர்களுள்ளும் சைவசித்தாந்திகள், இல்லை இல்லை வேதாகம சைவசித்தாந்திகள், கூறியவற்றையும் செய்த முயற்சிகளையும் நீங்கள் நன்கு அறிவீர்கள்.

இவர்களுடைய கூற்றுக்களும் முயற்சிகளும் இவர்கள் யாவரும் ஒரு குலத்துக்கு ஒரு நீதியினை நாட்டும் அநீதிக்கும் அறியாமைக்கும் அடிமைப்பட்டவர்கள் என்பதை நன்கு காட்டின. திருக்குறளை நன்கு படித்து உணர்ந்தவர்கள் இப்படி நடப்பார்களா? உணர்ந்து பாருங்கள்; உண்மையைக் கூறுங்கள். பேராசிரியர் சுந்தரம்பிள்ளை உள்ளம் உருகிப் பாடியதையுங் கேளுங்கள். "வள்ளுவர்செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்கள் உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக்கு ஒருநீதி."

தமிழ் மக்கள் உயர்ந்த வாழ்வை அடையவேண்டுமெனின், திருக்குறள் கூறும் அறவாழ்வை-அன்பு நெறியை-அருள் நிலையை அவர்கள் மேற்கொள்ளவேண்டும். இதற்குத் தமிழ் மக்கள் திருக்குறளை நன்கு படிக்கவேண்டும். நாடெங்கும், வீடெங்கும், நம் உள்ளமெங்கும் திருக்குறளின் தெய்வமணங் கமழவேண்டும் என்று நான் எண்ணினேன். அன்பர் சிலருடைய உதவியுடன் தமிழ்மறைக் கழகம் ஒன்றினை அமைத்து ஆவனசெய்ய முயல்கிறேன். இம் முயற்சிக்கு ஆதரவளிக்கும் முறையிலே இத்திருக்குறள் மாநாடு நடைபெறுவது மகிழ்ச்சிக் குரியது. இம் மாநாட்டை மிகச் சிறப்பாக நடத்துதற்கு அரும்பாடுபட்ட திருக்குறள் மன்றத்தார்க்கு நன்றி கூறுகின்றேன்.

திருக்குறள் ஓர் அன்பு நூல்; அழகு நூல். பிற நூல்களெல்லாம் அறிவே அழகு, கல்வியே அழகு என்று கூறத் திருக்குறள் அன்பே அழகு, என்கிறது. இது மாத்திரமா! அன்பே வாழ்வு, அன்பே உயிர்நிலை, அன்பே

இன்பம், அன்பே அறத்துக்குச் சார்பு, அன்பே பொருளுக்குத் துணை, அன்பே மறத்துக்கும் மருந்து என்றுங் கூறுகிறது. 'அன்பின் தத்துவம் அமாரும் அறிந்ததன்று' என்று கம்பர் பாடினுர். இந்த அன்பின் தத்துவத்தை யாவரும் அறிய விளக்கும் தனிப் பெருமை திருக்குறளுக்கே உரியது. காவியங்களும், நீதி நூல்கள் தவிர்ந்த ஏனைய நூல்களும் மக்களிடத்தே விளங்கவேண்டிய அன்பு, அருள், ஒழுக்கம், ஒப்புரவு, இன்சொல், ஈகை முதலியவற்றை இராமன், சீவகன், உதயணன், அப்பர், சுந்தரர், சம்பந்தர் முதலிய பிறரிடத்தே வைத்து வருணிக்கின்றன. திருக்குறளோ இவற்றையெல்லாம் ஒவ்வொருவரிடத்தும் அமைத்து விளக்குகிறது. பிற நீதி நூல்களும் இவ்வாறே கூறுகின்றனவெனினும் முயற்சியினுல் எவரும் உயர்ச்சி அடையலாம் எனவும், எண்ணிய எண்ணியாங்கு எய்தலாம் எனவும், விதியையும் முயற்சியினுல் வெல்லலாம் எனவும் திருக்குறள் கூறுவதுபோல அவை அழுத்தமாகக் கூறவில்லை.

மேலும், நம்மை நாமே நிறுத்தற்கு வேண்டிய துலாக்கோலையும், உரைத்துப் பார்த்தற்கு இன்றியமையாத உரை கல்லையும், அளந்தறிதற்கு உதவியான அளவு கோலையும் அது தருகிறது. எல்லார்க்கும் ஒரே விதமான நீதியையும் ஒரே வகையான சட்டத்தையும், ஒரே தன்மையான ஒழுக்கத்தையும் வகுக்கிறது. அறியாமையையும் அநீதியையும் அகற்றுகிறது. ஆரவாரத்தையும், ஆடம்பரத்தையும் பழிக்கிறது. சுயநலத்தையும் போலி வேடத்தையும் சூறையாடலையும் வேரோடு களைகிறது. வறியவர்களுக்கு வழி காட்டுகிறது ; வீணில் உண்டு களித்திருக்குஞ் செல்வர்களை இகழ்கிறது. தாழ்த்தப்பட்டவர்களுக்கும் அடக்கப்பட்டவர்களுக்கும் ஆறுதல் அளிக்கிறது ; உய்யும் வழியினை உரைக்கிறது ; உயரும் நெறியைக் காட்டுகிறது.

" அருமை யுடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும் "

என்கிறது.

அறமே ஆக்கம், அன்பே உயிர்நிலையென்று அது பேசினாலும் பொருளும் வேண்டும்; பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை. நல்ல வழியிலே பொருளைத் தேடு. அப்படித் தேடிய பொருள் அறத்தையும் இன்பத்தையும் தரும் என்றுங் கூறுகிறது. அன்பையும், அருளையும், பொருளையும் தொடர்புபடுத்துகிறது.

"அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு"

என்றுரைக்கிறது.

இந்த உலகிலே நீ வாழப் பிறந்தாய். வாழும் முறையை நன்கு அறி. இன்பமாக வாழ், உன்னைப்போற் பிறரையும் மதித்து நட. தீதின்றி வாழ நீ விரும்பினால், பிறர் குற்றங் காண்பது போல் உன் குற்றத்தையுங் காண் என்று இயம்புகிறது.

திருக்குறள் வெறும் வேதாந்தம் பேசும் நூலன்று. பசி தீர்க்கும் அமுதசுரபி அது. முயற்சி செய், பொருளீட்டு, பகுத்துண், பல்லுயிரையுங் காப்பாற்று, இசைபட வாழ் என்று அது வழிகாட்டுகிறது.

"பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை"

என்று முடிவு செய்கிறது.

இந்திய நாகரிகத்தை, ஆரிய நாகரிகம், திராவிட நாகரிகம் என்று பிரித்துப் பெருமை சிறுமை பேசுகிறோம். திராவிட நாகரிகத்தைத் தமிழ் நாகரிகம் என்று கூறுவதே பொருத்தமானது. திராவிட மென்னுஞ் சொல் இடைக் காலத்தே தோன்றியது. தமிழ் மக்களின் பழம் பெருமையை உணர்த்தத் தக்கதன்று. ஆரிய நாகரிகத்திலும் பார்க்கத் தமிழருடைய நாகரிகஞ் சிறந்தது என்று கூறுதற்குரிய காரணங்கள் பலவுள. இவற்றுள்ளே சிறந்தது தமிழ் மக்கள் பெண்ணுக்கு அளித்த பெருமையாகும். ஆரிய சமுதாயத்திற் பெண் தாழ்த்தப்பட்டவளாகவும் உடைமைப் பொருளாகவும் நடத்தப்பட்டாள். பொன்

ஞேடும், மண்ணேடும் பெண்ணேயுஞ் சேர்த்தார்கள். பெண்ணைப் பேயென்றும், அவளை வெறுத்து ஒதுக்க வேண்டுமென்றுங்கூடக் கூறினர். தமிழரோ பெண்ணை ஆணைப் போலவே சமமாக மதித்தனர். பெண்ணை வாழ்க்கைத் துணையென்று குறள் கூறுகின்றது; கற்புடைய பெண்ணிலும் சிறந்த பொருள் வேறில்லை என்கின்றது; அவளைப் பெய்யெனப் பெய்யும் மழையெனப் போற்றுகின்றது. உள்ளத்தையும் வாழ்வையும் ஈரமுடையனவாயும் வளமுடையனவாயும் ஆக்குபவள் பெண்ணன்றோ?

இத்தகைய பெருமை வாய்ந்த பெண்ணுடன் அற வாழ்வை அன்புமயமாக்கி வாழ்ந்து பகுத்துண்டு பல்லுயி ரோம்பி இன்பம் அடைதலே திருக்குறள் கூறும் வாழ்வாங்கு வாழும் நெறி எனலாம். இம் மகாநாடு பொலிக; வள்ளுவர் குறள் வாழ்க.

சமாஜ அறிக்கை

30-11-52 அன்று கூட இருந்த சமாஜ உறுப்பினர் பொதுக்கூட்டம் பல அன்பர்களின் வேண்டுகோளின்படி, கார்த்திகையை முன்னிட்டுத் தள்ளிவைக்கப்பட்டது. அக் கூட்டம் 26-12-52 அன்று மாலை 4-30 மணிக்குச் சென்னை, மல்லிகேச்சுவரன் கோயில் (பூக்கடைக் கோயில்) அநுபூதி மண்டபத்தில் நடைபெறும். அன்று போதிய நிறைவெண் இல்லாவிட்டால் அக்கூட்டம் மறுநாள் (27-12-52) அதே இடத்தில் அதே மணிக்குக் கூடி வருவோரைக் கொண்டு முடிவு செய்யும்.

இவ்வாண்டின் சைவர் மாநாட்டையும் மகாசமாஜ ஆண்டு விழாவையும், 1953-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஈரோட்டில் நடத்துவதென்று தீர்மானித்திருப்பதைக் கருதி, நிகழும் டிசம்பரில் சென்னை மல்லிகேச்சுவரன் ஆலயத்தின் அநுபூதிமண்டபத்தில் 27-12-52 சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு மகாசமாஜத்தின் மாதக்கூட்டம் ஒன்று நடைபெறும். மற்ற விவரங்கள் தனிப் பிரசுரங்கள் வாயிலாகவும் தினசரிப் பத்திரிகைகள் வாயிலாகவும் வெளியிடப்படும். அன்பர்கள் திரண்டுவந்து பயன்பெறுவார்களாக.

செய்தித் திரட்டு

23-10-52. போத்தனூர் கண்மருத்துவசாலைத் திறப்பு: விவிலிய சமயத்தார்களின் ஆர்வத்தினால் சின்னஞ்சிறிதாகத் தொடங்கின இச்சாலை இப்போது மிகப்பெரியதாகக் கட்டப்பட்டு ராஜகுமாரி அமிர்த காவூர் அம்மையாரால் திறந்து வைக்கப்பட்டது. சைவசங்கங்கள் இதைப்போல ஒரு அற நிலையத்தையும் இதுவரை தொடங்கி வைக்கவில்லை.

26-10-52. மாணவர் கல்விச் சங்கம், கோவை:—பசுக் காத்தல் நமது சமய அறங்களில் ஒன்று. அதனை வற்புறுத்த வேண்டி ஆசிரியர் தலைமையில் ஒரு கூட்டம் கூடித் தக்கதொரு தீர்மானம் செய்து வைத்தது.

31-10-52. பீளமேட்டுக் கல்லூரித் தமிழ்விழா: ஆசிரியர் தலைமையில் திரு. அப்பாதுரை அவர்கள் திருக்குறளைப் பற்றிப் பேசினார்கள். மறுநாள் திரு. G. சுப்பிரமணியம் அவர்கள் வள்ளுவரையும் கம்பரையும் ஒத்திட்டுப் பேசினார்கள்.

3-11-52. சேலம் கல்லூரியில் அதன் தலைவர் தலைமையில் நமது ஆசிரியர் "எமக்கு உறுதிகள் உளவோ" என்னும் பொருள்பற்றிப் பேசினார்கள்.

17-11-52. வடக்கே காவேரிக்கரையில் பண்டைய தலைநகராகிய தலைக்காட்டில் 12 ஆண்டுகளுக்கொருமுறை நடைபெறும் "பஞ்சலிங்க தரிசனம்" நடந்தது. மைசூர் மன்னர் உள்பட பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து வழிபட்டனர்.

தமிழ் நாட்டுத் துறவிகள் மகாநாடு :—திருவண்ணுமலையில் கார்த்திகைத் திருநாளை யொட்டி சக்திவிலாச மண்டபத்தில் 26-11-52 முதல் 28-11-52 வரை சொற்பொழிவுகளும் 29-ல் திருக்கூட்ட ஊர்வலமும் நடைபெற்றன. துறவிகள் பலபேர் கலந்து கொண்டார்கள். அருமையான சொற்பொழிவுகள் நடைபெற்றன. சுவாமி அருணகிரி நாதர், சதாசிவ அடிகள், சோமசுந்தரத்தம்பிரான் முதலிய துறவிகள் தலைமையில் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

அருள்நெறித் திருக்கூட்டத் திருவிழாக்கள் : 14-11-52ல் மாயூரம் நகராண்மைக் கழகப் பள்ளியில் குன்றக்குடி சந்நிதானத்தின் தலைமையில் நடைபெற்றது. மேலும் செம்பொனர் கோயில் திருக்கூட்டத் தொடக்கவிழா சந்நிதானத்தின் தலைமையில் தொடங்கப்பெற்றது. திருஞானசம்பந்தம், மீனுட்சிசுந்தரனர், துரை அரங்கனர் முதலியோர்கள் பேசினர்கள்.

கோவை தமிழ்ச்சங்க நிகழ்ச்சிகள் :— 9-11-52 கோவைகிழார் அவர்கள் " ஆங்கிலப்பாமகள்" என்பதைப் பற்றிப் பேசினர்கள்.

16-11-52. பண்டிதர் D.N. ஆறுமுகம்பிள்ளை தலைமையில் ஆசிரியர் வாசுதேவன் கம்பர் கவிநயங்களைப்பற்றியும், இராமர் குணங்களைப் பற்றியும் பேசினர்.

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by V. Rajammal, (P I. Card No. M. S. 115) Edited and Published by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Saiva Siddhanta Maha Samajam, at 53, Thiruvalluvar Street, Saidapet, Madras-15, P.I.Card No. M. S. 81.